Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :44 மார்கழி 24 ஆம் நாள் வியாழக்கிழமை 09 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050

A/L 2019 உயர்தரப் பரீட்சை
பெறுபேற்றின் யாழ் மாவட்டத்தில்
முன்னணிப் பெறுபேறுகளுடன்
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2022 Day Class
கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
T.P - 076 166 1986, 076 535 0999



# அதிகாரப் பகிர்வு தந்தால் ஆதரவு வழங்கத் தயார்

## சபையில் சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 9
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளதென்றால் அதற்குத் தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியாமல் போனமையே காரணமாகும். அதிகாரப் பரவலாக்கல் மூலமாக தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

23 ➤

# கூட்டமைப்பின் மீது வாசுவுக்கு சந்தேகம்!

கொழும்பு, ஜன. 9
புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்களை கோருவதானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா என்பது தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும் - என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.


05 ➤

# 13 இல்லையெனில் கோத்தாவின் தீர்வு என்ன?

## கேள்வியெழுப்புகிறார் சரவணபவன் எம்.பி

யாழ்ப்பாணம், ஜன. 9
13ஆம் திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்களைக் கூட தரமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய. அப்படியானால் அவர் எந்தவகையான தீர்வினை தமிழ் மக்களுக்கு வழங்கப்போகிறார் என்பதைத் தெளிவா

08 ➤



## ஸஹ்ரானின் செயலுக்காக

# முஸ்லிம்களை கேவலப்படுத்தாதீர்

## ரிசாட் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9
'ஸஹ்ரான்'என்ற ஒரு கயவன் செய்த அந்தக் கொடிய செயலுக்காக, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் கேவலப்படுத்துவது கவலை தருகின்றது.
இவ்வாறான சிந்தனை மாற்றப்படல் வேண்டும். நாடு பிளவுபடக் கூடாது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.
ஜனாதிபதியின் கொள்கை விளக்க

05 ➤

முச்சந்தி முரளி



"அடிச்ச கைப்புள்ளைக்கே இப்பிடி என்டால் அடி வாங்கினவன் உயிரோடயா இருப்பான்?...!"

# பழிக்குப் பழி

## 80 அமெரிக்கப் படைகள் பலி மறைக்கின்றார் அதிபர் ட்ரம்ப்

தெஹ்ரோன், ஜன. 9
ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ நிலைகள் மீது ஈரான் இராணுவம் நேற்று நடத்திய ஆவேசத் தாக்குதலில் 80 அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

08 ➤

# வலயப் பணிப்பாளரை விசாரணை செய்க!

## கல்வி அமைச்சு முன் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9
யாழ்ப்பாணம் செம்மணியிலுள்ள வடக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்

05 ➤





# கொக்குவிலில் மாணவியின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜன.9
கொக்குவிலில் வீட்டு மலசலகூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில், மாணவி ஒருவரின் சடலம் நேற்று

23 ➤



# புலியை அழி!

வடமராட்சி, ஜன. 9
வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் இளைஞர்கள் வரைந்து கொண்டிருந்த புலிச் சுவரோவியத்தை பொலிஸாருடன் வந்த புலனாய்வாளர்கள் மிரட்டி அழிக்கவைத்த சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றது.

05 ➤

# ஈரான் தளபதி படுகொலை
# அமெரிக்கத் தாக்குதலை கண்டிக்கிறது இலங்கை!

கொழும்பு, ஜன. 9

ஈரான் இராணுவத் தளபதி ஜெனரல் சுலைமானி அமெரிக்காவின் தாக்குதலில் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அத்துடன், மனித உரிமைகள் குறித்து துணிகரமாக குரல் எழுப்பும் நாடுகளும், அமைப்புகளும் இந்த விவகாரத்தில் மௌனம் காப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தத்தாவது:

'ஈரான் இராணுவத்தின் பிரதானியான ஜெனரல் சுலைமானி பக்தாத் நகருக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது 'ட்ரோன்' தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப் பொறு ப்பேற்றார். ஜெனரல் சுலைமானி யை தாங்கள் தான் கொன்றோம் எனவும் அறிவித்தார். ஆனால், உலகில் மனித உரிமைகள் பற்றி குரல் எழுப்பும் நாடுகளும், அமைப்புகளும் இது குறித்து இன்னும் எவ்வித அறிவிப்பையும் விடுக்க வில்லை. எனவே, ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக குரல் எழுப்பும் தலைவர்களின் உயிருக்கு இன்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சுதந்திரம் மற்றும் இறையாண்மைக்காக முன்னின்று செயற்படும் நாடு என்றவகையில் நாம் எமது எதிர்ப்பை வெளியிடவேண்டும்.

அத்துடன், கட்சி அரசியலை கைவிடுத்து இந்த சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். உலகுக்கு 'சர்வதேச பொலிஸ் காரன்' தேவையில்லை. சுயாதீன நிலைப்பாட்டில் இருந்து கொண்டே நாம் இந்தக் கருத்தை வெளியிடுகின்றோம்' என்றார் அமைச்சர் டலஸ் அழகப் பெரும். (ம-44)



# கிழக்கு ஆளுநர் வழங்கிய நியமனத்துக்குத் தடை

திருகோணமலை, ஜன. 9

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக கருணாதாச உடகே கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத்தால் நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த நியமனத்துக்கு உடனடியாக இடைக்காலத் தடையை திருகோணமலை மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநராக அனுராத ஜகம்பத் நியமிக்கப்பட்டிருந்தார். ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருந்த மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஜெயசிங்கம் உள்ளிட்ட ஆணைக்குழு உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கோரியிருந்தார். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு சுயாதீனமானது என்று தெரிவித்து அவர்கள் பதவி விலக மறுத்திருந்தனர். இந்த நிலையில், திடீரென, புதிய தலைவராக கருணாதாச உடகே கிழக்கு மாகாண ஆளுநரால்நியமிக்கப்பட்டிருந்தார். இதனை எதிர்த்து யாதுரிமை (கோவாரட்ண்) எழுத்தாணை மனு திருகோணமலை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் முன்னிலை யானார்.

ஜனவரி 16ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்த நீதிபதி, அது வரையில் புதிய தலைவரின் நியமனத்துக்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். (ஒ.5)

# தெல்லித்தென்றல் நூல் வெளியீடு

கொழும்பு, ஜன. 9

வலி.வடக்கு பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் வாசிப்பு மாத நிகழ்வும் தெல்லித்தென்றல் நூல் வெளியீடும் இன்றைய தினம் பகல் 1.30 மணிக்கு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில்,நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு யாழ் பல்கலைக்கழக உதவி நூலகர் கல்பனா சந்திரசேகர் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

# தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 9

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-131)

## தீர்வை வெல்ல இயலாவிட்டாலும்
# தனக்கென ஒரு வீட்டை வென்றுள்ளார் சம்பந்தன்
## வீரவன்ச சீண்டல்

கொழும்பு, ஜன. 9

தமிழ் மக்களுக்கான தீர்வை வெல்லாவிட்டாலும் தனக்கென ஒரு வீட்டை வென்றுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல்வீரவன்ச.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் 2ஆவது நாளாகவும் விவாதம் நடைபெற்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றி முடித்த பின்னர், ஆளுந்தரப்பு பேச்சாளராக அமைச்சர் விமல்வீரவன்ஸவின் பெயர் அழைக்கப்பட்டது.

இதன்படி தனதுரையைத் தொடர்ந்த விமல்வீரன்ச,

'இந்த நாடாளுமன்றத்தில் மூத்த அரசியல்வாதியாக இரா.சம்பந்தன் திகழ்கிறார். கடந்த ஆட்சியின்கீழ் தமிழ் மக்களுக்காக எதையும் வென்றெடுக்காவிட்டாலும், தனக்கென ஒரு வீட்டை அவர் பெற்றுள்ளார் என்பது மகிழ்ச்சியே.' என சிரித்தபடியே கூறினார்.

அதேவேளை, ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், 'ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய உரையாடல்கள் தொடர்பான குரல் பதிவுகள் தற்போது சமூகவலைத்தளங்களில் வெளியாகிவருகின்றன. சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் குரல் பதிவுகளில் ஓரிரு விடயங்களே அம்பலமாகியுள்ளன. இனிவரும் நாட்களில் ஏனையவை வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரஞ்சனின் விடயங்களை காவல்துறையினர் வெளியிடவில்லை. கைப்பற்றப்பட்ட இறுவெட்டுகள் அவர் முன்னிலையிலேயே சீல் வைக்கப்பட்டன. பின்னர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டன. எனவே, ரஞ்சனின் பிரதிகள் வேறொரு நபர் ஊடாகவே வெளியில் சென்றுள்ளன. அது எப்படி என ரஞ்சன்தான் ஆராய வேண்டும். தவறான விடயங்கள் உள்ளன என்பதை அறிந்துதான் காவல் துறையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

மகாநாயக்க தேரர்களை, கத்தோலிக்க மதகுருமார்களை எப்படியெல்லாம் அவர் அவமதித்தார். அந்த கர்மவினையைதான் இன்று அனுபவிக்கவேண்டிய நிலை ரஞ்சனுக்கு ஏற்பட்டுள்ளது. குரல் பதிவு வெளியாவதை தடுப்பதற்கு இடைக்கால தடை உத்தரவைப் பெற முயற்சிக்கிறார்களாம். அதற்கு இடமளிக்கக்கூடாது. ஏனெனில் கடந்த நான்கரை வருடங்களில் என்ன நடந்தது என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ம-44)

## போர்ப் பதற்றம் காரணமாக
# மத்திய கிழக்குப் பறப்பை மாற்றியது எயார்லைன்ஸ்!



கொழும்பு, ஜன. 9

பாரசீக வளைகுடாவில் உருவாகியுள்ள பதற்றநிலை காரணமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையானது கொழும்பிலிருந்து லண்டன் செல்லும் மற்றும் லண்டனிலிருந்து கொழும்பு வரும் விமானங்களின் பயணப் பாதைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில் ஈரான் மற்றும் ஈராக் ஆகாய பரப்புக்களை தவிர்க்கும் வகையிலேயே கொழும்பு லண்டன் கொழும்பு விமானங்களின் பயணப் பாதைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் தெரிவித்தது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சர்வதேச நிலைமைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வரும் அதேநேரம் விமானப் பணியாளர்கள் மற்றும் பயணிகளின் நலன் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச அதிகாரிகளுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும் அறிவித்துள்ளது. (ம-24)

# 13ஆவது திருத்தம் தீர்வல்ல இந்தியாவும் உணரவேண்டும்

## விக்கி அழுத்தமாக எடுத்துரைப்பு



**யாழ்ப்பாணம், ஜன. 9**

**13 ஆவது திருத்தம் தீர்வல்ல. அது பயனற்றது என்பதை இந்தியா உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்து கொண்டால் 13 ஆவது திருத்தத்தை பரிந்துரைக்க இந்தியாவே தயங்கும் என்கிறார் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி. விக்னேஸ்வரன்.**

இந்தியா பரிந்துரைக்கும் 13ஆவது திருத்தம் தமிழருக்கான தீர்வு இல்லை. ஒற்றையாட்சிக்குள் தரப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடுகள் பயன் அற்றவை. 13 ஆவது திருத்தச் சட்டம் அவர்கள் எதிர்பார்த்த மாதிரி இல்லை என்பதை இந்தியா உணர வேண்டும்.

உதாரணத்துக்கு 1992 ஆம் ஆண்டின் 58 ஆவது சட்டத்தின் கீழ் மாகாண சபையின் நிர்வாகத்திறன் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. இந்தியா இதை உணர்ந்தால் அவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை பரிந்துரைக்கத் தயங்குவார்கள் என்பதே எமது கணிப்பு. - என்றார்.

(ஒ.5)



## செய்யவேண்டிய வேலைகள் வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஜன. 9

வவுனியா மாவட்டத்தின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

மாவட்டச் செயலர் எம்.ஹனீபாவின் ஒழுங்கமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் தலைமையில் இது நடைபெற்றது.

வவுனியாவின் நான்கு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது. வவுனியா நகரம் மற்றும் உபநகரங்களுக்குட்பட்ட முக்கிய வீதிகள் சீரமைத்தல், விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏதுவான குளங்களைச் சீரமைத்தல், பொதுமக்கள் வருமானத்தை ஈட்டும் பொருட்டு மீன் குஞ்சுகளை நன்னீர் குளங்களில் விடுதல், கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனியா வடக்கு மற்றும் செட்டிகுளத்தில் அமைக்கப்பட்டு இயங்காத நிலையில் உள்ள ஆலைகளை இயங்கவைக்க நடவடிக்கை எடுத்தல், மாவட்டத்தில் தற்போது தேவையாகவுள்ள 8 ஆயிரம் வீடுகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களைப் பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் முன்வைத்தனர்.

இவற்றுக்கான திட்ட முன்மொழிவுகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (து-110)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தின் மாதாந்த முழுநிலா கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் "உலகமயமாதலும் தொழில் கல்வியின் அவசியமும்" எனும் தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.அகிலன் வளவாளராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து திறந்த கருத்துப்பகிர்வு இடம்பெறும் கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினரையும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.9

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவு செய்யக் கூடிய ஆங்கில பாடம் தொடர்பான கருத்தரங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

2020,2021, 2022 ஆகிய வருடங்களில் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளில் ஆங்கில பாடத்துக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் 10 மற்றும் தரம் 11 இல் கல்வி பயிலும் எதிர்காலத்தில் உயர்தரத்தில் ஆங்கிலப் பாடத்தை தமது பிரதான பாடங்களிலே ஒன்றாகத் தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது இந்தப் பாடம் தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் , உயர்தர வகுப்பு ஆங்கிலப் பாடத்தில் ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள் கருத்தரங்கில் பங்கேற்க முடியும்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆங்கிலத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மன்னாருக்கு புதிய பிரதேச செயலர்



மன்னார், ஜன.9

மன்னார் நகர பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலகத்தில் உதவி செயலராக கடமை புரிந்த மனோகரன் பிரதீப் மன்னார் பிரதேசத்துக்கான பிரதேச செயலராக நியமிக்கப்பட்டு நேற்று புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற அவர் கருத்துத் தெரிவிக்கும் போது;

"நான் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றியபோது போரால் மிகவும் பாதிப்படைந்த மக்களுக்கு மத்தியிலேயே கடமை புரிந்தேன். மன்னாரிலும் மக்கள் மத்தியில் பல பிரச்சினைகள் இருக்கின்றமையை உணர்கின்றேன். ஆகவே கண்டாவளையில் பெறப்பட்ட அனுபவங்களைக் கொண்டு இங்குள்ள மக்களுக்கு எனது சிறந்த பணியை மேற்கொள்ள முடியும் என நான் எதிர்பார்த்து இருக்கின்றேன்- என்றார்.

(ஐ-60,213)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை சிவஞானவதி
### (சிவம் அக்கா)



காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும், நாவற்கண்டி காரைநகரில் வசித்தவரும் தற்போது 37/5, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை சிவஞானவதி (சிவம்அக்கா) நேற்று (08.01.2020) புதன்கிழமை சிவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகசிவம்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பராசக்தி, சிவ சிதம்பரம், சிவகௌரியம்மா, கற்பகவதி, சதாசிவம் (பண்டிதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகாமசுந்தரி, சிவகலை, சிவசோதி (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சிவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நித்தியானந்தன் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்), குமாரரட்ணம் (பபா கடை) இராஜேஸ்வரி, சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நித்தியா (ஆசிரியை, யாழ் இந்துக் கல்லூரி), + உமாகாந்தன் (ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி), செந்தூரன் (கட்டார்), உமாசுதன், உமாசங்கர், உமாகாந்தன், பிரணவன், ரஞ்சனி, சாம்பவி, சங்கவி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் நிவேதிகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2020) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/5, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
க.சிவசோதி - மகன் 0212215543
க.சிவபாலன் - மகன் 0041433213563/ 0041786190980
தி.நித்தியானந்தன் (Rtr. GS) - மருமகன் 0766008355
சி.குமாரரட்ணம் (பபா - மருமகன்) - 0770711287



# அதிசயக் குதிரை

கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப்படையும் வலிமையுள்ளதாக இருந்தது சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னார்.

அதன் பிரகாரம் ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டு வந்தது. மக்கள் அத்தொகையைப்பெற்றுக்கொண்டு குதிரையை நன்கு ஊட்டமளித்து வளர்த்தனர். அதே போல் தெனாலி ராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப் பட்டது.

ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய துவாரம் வைத்திருந்தான். அந்த துவாரத்தின் வழியாகப் புல்லை. நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது.

குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான். ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அரண்மனைக்கு வரவழைத்தார் மன்னர்.

அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப் பட்டன. மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிகவும் திருப்திகரமாக இருந்தமையால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை" என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராமனோ "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் தான் இங்கே கொண்டுவர வில்லை." என்றான்.

"குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார்.

குதிரைப்படைத்தலைவருக்கு நீண்ட தாடியுண்டு குதிரைப் படைத்தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கௌவிப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத் தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரை யாகத் தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்கு குதிரையின் வாயில் குதிரைப் படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும். தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார்.

அதற்குத் தெனாலிராமன் "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியைக் கௌவிக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகி இருக்கும் " என்றான்.

இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்து விட்டார்.

## வர்ணம் தீட்டுவோம்



## மாலைப் பொழுது சிவப்பதேன்?




மாலைப் பொழுதில் பூமியின் தோற்றம் வெளிறிப்போன சிவப்புப் போலத் தோற்றமளிக்கும். வானிலிருந்து வரும் வெளிச்சம் சிவப்பாகத் தெரிவதால், மாலைப் பொழுது சிவப்பாக இருக்கிறது. மேகத்தின் பக்கத்தில் ஏதாவது ஒரு பொருள் தாழ்ந்த பகுதியில் இருந்தால், அது மேகத்தின் தூரத்தில் இருக்கும் பொருள் ஒளிவிடுவதை விட, கீழே இருக்கும்போது அதிக பிரகாசமாகவே தோற்றமளிக்கும்.


சூரிய வெளிச்சம் இப்படித் தரைப் பகுதியில் உள்ள சிவப்பு அரிப்புப் போல் இருக்கும். மேகம் வழியாக வரும்போது, சிவப்பு மேகம் அழகான தோற்றத்துடன், சிவப்பாகக் காட்சியளிக்கும். அதன் மேற் பரப்பு, ஆழமாக ஊடுருவப்பட்டு, அழகாகத் தெரிவதால், சூரியன் மேற்குத் திசையை அடையும் போது சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கிறது.

## பொது அறிவு

1. பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?
   330
2. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
   நெதர்லாந்து
3. உலகிலேயே அதிகளவு எரிமலை உள்ள நாடு எது?
   இந்தோனேஷியா
4. உலகிலேயே மிக நீளமான மலை எது?
   அந்தீஸ் மலை
5. உலகிலேயே அதிக மழை பெறும் இடம்?
   சீராப்புஞ்சி
6. பூனையின் கண் பார்வை மனிதனை விட எத்தனை மடங்கு கூர்மையானது?
   எட்டு

## படத்தில் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன கண்டு பிடிப்போம்...!









## குட்டி முயல்

குட்டி முயல் குட்டி முயல் எனது வீட்டில்
பாசத்தோடு நான் அதனைப் பார்த்து வளர்த்தேன்
கரற் கொடுத்தேன் கீரை கொடுத்தேன் சந்தோசமாக
கூட்டினிலே போட்டு வைத்தேன் காவலுக்காக
அன்று மாலை டியூசன் வகுப்பு சென்றுவிட்டேனே
திருடன் ஒருவன் என் முயலை தூக்கிச் சென்றான்
முயலைக் காணோம் முயலைக் காணோம் என்று அலறினேன்
எனது அப்பா செல்லக் குட்டி
நீ இருக்க எனக்கு ஏன் முயல் குட்டி என்று
என்னை அள்ளி அணைத்தார்

## கூட்டமைப்பின்...

ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்பது தேச எல்லையை பாதுகாப்பதற்கான இராணுவ பலம் என்பது மட்டுமல்ல. மக்கள் பாதுகாப்பு, பொருளாதாரம், தேசிய வளங்கள், ஒற்றையாட்சி, இறையாண்மை என பல அம்சங்களும் அதற்குள் உள்ளடங்கும்.


கடந்தகாலத்தில் மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை, தேசிய வளங்கள் விற்பனை செய்யப்பட்டன. பொருளாதார ரீதியிலான பிரச்சினையும் ஏற்பட்டது. எனவே, புதிய ஆட்சியின் தேவையை மக்கள் உணர்ந்தனர். அதற்காக வாக்களித்தனர். எனவே, ஜனாதிபதித் தேர்தல் முடிவை இன ரீதியிலான பெறுபேறாக கருதக்கூடாது. புலிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட்டன. தற்போது புலிகள் இல்லை. எனினும், கூட்டமைப்பு :அதிகாரங்களை தருமாறு கோருவது பற்றி நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

பிளவுபடாத, பிரிக்கமுடியாத நாட்டுக்குள் தீர்வு என கூறினார்கள். ஆனால், ஒற்றையாட்சி என்பதற்கு பதிலாக ஒருமித்த நாடு என்ற பதம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் விளக்கம் கேட்கப்பட்டாலும் இறுதிவரை தெளிவுபடுத்தவில்லை.

எனவே, இவ்வாறு கூட்டமைப்பு அதிகாரங்களை கோருவது எதிர்காலத்தில் பிரிவினைக்கு வழிவகுக்குமா, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்குமா என்பது பற்றி சந்திக்கும் உரிமை எமக்கு இல்லையா? ஒற்றையாட்சியையும், இறையாண்மையையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. இவைகூட தேசிய பாதுகாப்பின் பிரதான அம்சங்கள்தான்.

அதேவேளை, எம்.சி.சி உடன்படிக்கையை நாம் நிராகரித்துவிட்டோம். ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்திலும் ஏற்கமுடியாது என கூறினோம். தற்போது நாட்டுக்கு பயன்தரக்கூடிய வகையில் மாற்றம் நடந்தால் பரிசீலிக்கலாம். ஆனால், இலங்கைக்கு ஏற்றவகையில் உடன்படிக்கையை தயாரித்தால் அதனை அமெரிக்கா ஏற்காது. எனவே, எச்.சி.சி உடன்படிக்கை தற்போது ஏற்புடைய விடயமல்ல என்பதை கூறிக்கொள்கின்றேன்' என்றார் வாசுதேவ நாணயக்கார. (அ.ம44)

## மரண அறிவித்தல்



பிறப்பு
30 . 03 . 1949

இறப்பு
06 . 01 . 2020

### நடராசா அருளானந்தமூர்த்தி
### (இராமுகடை)

கரவெட்டி சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகவும் கோவிற்கடவை துன்னாலை மத்தி நெடிலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அருளானந்தமூர்த்தி 06.01.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் ஞானவதியின் அன்புக் கணவரும் கலைக்கௌரி (லண்டன்), நித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினம், பூபதி,விக்கினேஸ்வரமூர்த்தி, சோமஸ்கந்தமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவலிங்கம், காலஞ்சென்ற சோதிரூபன், யோகேஸ்வரி, சிவரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ரகுநாத்தின் (லண்டன்) மாமனாரும் தாரிணி, யஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரொண்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 11.12.2019 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் சீனித்தம்பி சபாரத்தினம்

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இன்று [09.01.2020] வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பலாலி வீதி, உரும்பிராய் கற்பகவிநாயகர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள அருள்மிகு கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக கருதி ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## முஸ்லிம்...

உரை தொடர்பில், நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதியின் அக்கிராசன உரையிலே சொல்லப்பட்ட நல்ல விடயங்களை நாங்கள் வரவேற்கின்றோம். நானும் எனது கட்சியும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் நல்ல விடயங்களுக்கு ஆதரவு தருவோம்.

வீண்விரயங்களைக் குறைக்கின்ற, அரச நிறுவனங்களுக்கு திடீர் விஜயம் மேற்கொள்கின்ற ஜனாதிபதியின் செயற்பாடு ஆரோக்கியம் அளிக்கின்றது. அத்துடன், பாதுகாப்பு அதிகாரிகளைக் குறைக்கின்ற செயற்பாடும் நல்லதே. 'அழகான இலங்கை, சுத்தமான நாடு' என்ற தொனிப்பொருளிலான செயற்பாடுகளும் நல்லதே.

அதேபோன்று, சிறுபான்மைச் சமுதாயத்தையும் சிறுபான்மைக் கட்சிகளையும் பிழையாக நோக்கும் கண்ணோட்டத்தைக் கண்டிக்கின்றோம். சிறு கட்சிகளை வெளியேற்றும் சிந்தனை, இந்த நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயல்பாடு என்பதை ஜனாதிபதிக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

அதுமாத்திரமின்றி, அவரது உரையிலே நீண்டகாலமாக போருக்கு முகங்கொடுத்து, துன்பத்திலிருக்கும் வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம் குறித்தோ அல்லது அவர்களுக்கான நிரந்தரத் தீர்வு குறித்தோ எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

திம்பு தொடக்கம், தொடர்ச்சியாக எத்தனையோ பேச்சுக்கள் தீர்வு தொடர்பில் இடம்பெற்றிருந்த போதும் அதைப் பற்றி ஒருவார்த்தை தானும் குறிப்பிடப்படாமை வேதனை தருகின்றது. அத்துடன், பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம் மற்றும் மறிச்சுக்கட்டி வரை உள்ள காணிப் பிரச்சினைகள் பற்றியும் கூறப்படவில்லை.

தற்போது, தேசியகீதம் தமிழில் பாடப்படக் கூடாதென்று அமைச்சர் ஒருவர் கூறியுள்ளமை வேதனையளிக்கின்றது. நாங்கள் பாடசாலை காலத்தில் தமிழ் மொழியிலேயே தேசிய கீதத்தை இசைத்தோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இவ்வாறான சம்பவங்கள் 1956ஆம் ஆண்டை நோக்கி, இந்த நாட்டை பின்நோக்கிச் செலுத்துகின்றதா? என்று சிறுபான்மைச் சமூகம் எண்ணத் தோன்றுகின்றது.

அத்துடன், 'இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம்' என நிரந்தரமாக முத்திரை குத்திப் பேசப்படுகின்றது. 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்று ஒன்று கிடையாது. இஸ்லாமிய மார்க்கம் 'அடிப்படைவாதத்தை' முற்றாக நிராகரிக்கின்றது. எவனோ ஒருவன் செய்த குற்றத்துக்காக இஸ்லாமியர்களை தூசிப்பது கண்டிக்கத்தக்கது. இந்த குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்டவர்களை நாங்கள் காட்டிக்கொடுத்திருக்கின்றோம். அவர்களை அழித்தொழிப்பதற்கு முழுமையாக உதவியுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, 'புலனாய்வுப்பிரிவு தலைமை அதிகாரியாக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டமை தவறு' என கூறியிருக்கின்றார். 'ஸஹ்ரான்' என்ற ஒரு கயவன் செய்த அந்தக் கொடிய செயலுக்காக, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் கேவலப்படுத்துவது கவலை தருகின்றது.

இவ்வாறான சிந்தனை மாற்றப்படல் வேண்டும். நாடு பிளவுபடக் கூடாது எனவும் பயங்கரவாதம் தலையெடுக்கக் கூடாதெனவும் நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் செயற்பட்ட ஒரு சமூகத்தின் மீது வீண்பழி சுமத்தப்படுகின்றது.

வைத்தியர் ஷாபியின் விடயத்தில் மீண்டும் அநீதி இழைக்கப்படுகின்றது. அவர் தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் மீண்டும், அவர் விசாரிக்கப்பட வேண்டுமென குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோருவது எந்த வகையில் நியாயமானது? குற்றமிழைத்தால் தண்டிக்கப்பட வேண்டுமேயொழிய, இஸ்லாமியர் என்பதற்காக அவர் தண்டிக்கப்படக் கூடாது. அண்மையில், நெலுந்தெனிய, உடுகும்புர பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு முன்னால் புத்தர் சிலை ஒன்றை வைத்துள்ளார்கள். அது உடனடியாக அகற்றப்படல் வேண்டும்.'- என்றார். (ம-44)

## புலியை...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

நாடெங்கிலும் இளைஞர்கள் தன்னார்வத்துடன் சுவர்களில் பல்வேறு ஓவியங்களைத் தீட்டி வருகின்றனர். அவ்வாறு வடமராட்சி - வேம்படிப் பகுதியிலும் இளைஞர்கள் சிலரால் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. புலி ஓவியம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் புலனாய்வாளர்களும் புலி ஓவியத்தை அழிக்குமாறு இளைஞர்களை மிரட்டியுள்ளனர். ஓவியம் வரைந்த இளைஞர்களின் பெயர் விவரங்களும் அவர்களால் எடுக்கப்பட்டுள்ளன. (ம-9,26)

## வலயப்...

தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்பில், 'வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரை விசாரணை செய்,மோசடி இடம்மாற்றங்களை உடனடியாக நிறுத்து, கல்வியில் அதிகார துஷ்பிரயோகங்களை நிறுத்து' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஆசிரியர்கள் தாங்கியிருந்தனர். (த-7,105)

## மரண அறிவித்தல்



மலர்வு
22
...
07
...
1915

உதிர்வு
08
...
01
...
2020

### தானியேல் திரேசம்மா (நாகம்மா)

மல்வம் உடுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தானியேல் திரேசம்மா (நாகம்மா) நேற்று **(08.01.2020)** புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரகாசம் தானியேலின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான மாணிக்கம் சின்னாச்சி தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்றவர்களான பிரகாசம், எலிசபெத் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் ஐயம்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் மரியம்மா, பொன்னரியம் காலஞ்சென்ற புலோனம்மா மற்றும் செல்வராசா (செட்டியார்), செபமாலை, சூசைநாதர், பத்திநாதர் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற வர்களான தம்பிராசா, வேலாயுதம் மற்றும் துரைசிங்கம், தேவநாயகி காலஞ் சென்ற மரியதிரேஸ் (கலா) மற்றும் செல்வமலர், திலகா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று **(09.01.2020)** வியாழக்கிழமை **மு.ப 10.00** மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் மல்வம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 504 6579, 077 443 4649**

## மரண அறிவித்தல்



### திருமதி கிருபாதேவி செல்வரட்ணம்

நாரந்தனை வடக்கு றோட்டை பிறப்பிடமாகவும், தையிட்டிப்புலம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் மேற்கு முத்தட்டுமட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாதேவி செல்வரட்ணம் 07.01.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற ஐயம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், கஜந்தன் (சுவிஸ்), ஜசிதா ஆகியோரின் பாசமிகு தாயும், அபினா (சுவிஸ்), பிரதீப் (ஜென்றல் எலற்றிக்) ஆகியோரின் அன்பு மாமியும், மீரா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நித்தியானந்தசிவம், சிறிநாதன், காலஞ்சென்றவர்களான தபா்ன், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லலிதாதேவி, காலஞ்சென்ற நடராசா, மற்றும் மகேஸ்வரி, காசிநாதன், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தட்டு மட வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(cs.30487) (13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### நல்லையா பாலேஸ்வரன்

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்சமயம் பிரான்சில் வசித்தவருமாகிய நல்லையா பாலேஸ்வ்ரன் யாழ்ப்பாணத்தில் கடந்த (06.01.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா லக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மீராவின் அன்புக்கணவரும் சாரா யுவர், பமீலா, மார்க் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன், பரமேஸ்வரி மற்றும் மாலா ஆகியோரின் அன்பு சகோதரரும் கனகம்மா, பரமகுரு, கதிர்காமநாதன், பத்மாவதி சற்குணராஜா பத்மினி சண்முகராஜா, ரவீந்திரன், லலிதா ஞானசேகரம், சுகுமார், சந்திரா வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மினி, நிர்மலா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் நிமலதாஸ், கௌரிபாலன், சுதர்சனா பாஸ்கரன், துவாரகா, ஜனனி, துவாரகா சரவணகுமார், காண்டீபன், லதிகா தனுஷன், அகிலன், அர்ச்சுனா, றதீஸ், றிதுஷன், றுக்ஷன், சுவர்ணா, தீபிகா, சயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் உமாசங்கர், பாலநேசன், கவிதா, யசோ, ஞானமோகன், ஹரிகரன், விஜயராணி, மேகலா, ஜானகி, நிர்மலா, கமல், நிஷாந்தி நிக்கோலா, பிரியந்தி பிரசன்னா, திலீப், சஞ்சீவன், விதுரா ஆகியோரின் சிறியதந்தையாரும் அபினா, ராகவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஜாமினி, ஜாமிலன், அஞ்சனா, ஜானகி, சஞ்சய், நவீன், அகலியன், பிருந்தன், றம்ஜா, அபிராமி, சௌமியா, பிரியங்கா, திவ்யபாரதி, சாயிசுரேக்கா, கோபி, மயூரி, (H) கெசோன், றிச்சிகா, சுலக்ஷன், சாமினி, சிலோஜன், சுஜீவன் ஆகியோரின் அன்பு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.04, அம்பலவாணர் வீதி, அத்தியடி எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை (10.01.2020) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் கோம்பயன் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம்**
**021 222 1203, 077 491 2596**

(CS30492/15/17)

**தகவல்: மீரா (மனைவி)**
**குடும்பத்தினர்**

## பண்பாட்டு விழுமியங்களுடன்

# பல்கலையில் தமிழமுதம்!

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழமுதம் நிகழ்வு பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்று நடைபெற்றது. 'மொழிதனைக் கடையும் இளையவர் பயணம்' என்ற தொனிப் பொருளில் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நோக்கிய எழுச்சிப் பேரணியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழர் கலாசார - பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தும் சிலம்பு, கரகம், பொம்மலாட்டம், புலியாட்டம், கம்படி, கரகாட்டம் மற்றும் இன்னியம் முழங்க விருந்தினர்கள் பிரதான வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் வடக்கு மகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்சார்ள்ஸ், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, யாழ். மாநகர முதல்வர் இ. ஆனோல்ட், ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், அதன் செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், மற்றும் மாணவர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-20)
















# நல்லூரில் திருடர் கைவரிசை 32 பவுண், 2 லட்சம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 9
நல்லூர்ப் பகுதியில் இரு வீடுகளுக்குள் உள் நுழைந்த திருடர்கள் 31 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 லட்சம் ரூபா பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.
நல்லூர் ஆலயத்தின் முன்பாக பருத்தித்துறை வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஜன்னலைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அலுமாரி உள்ளிட்டவற்றைச் சோதனைசெய்து 27 பவுண் நகைகளையும், ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
செட்டித் தெருவில் தனித்திருந்த மூதாட்டியின் வீட்டிலும் 5 பவுண் நகையும், 20 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் பொலிஸாரிடத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-105)

## 13...

கக் கூறவேண்டும். 13ஆம் திருத்ததில் சொல்லப்பட்டதை விடவும், மேலதிகமாக அதிகாரங்களைப் பகிரப் போகிறாரா? அல்லது 13ஆம் திருத்தச் சட்டத்தில் இருப்பதையும் எடுத்துக் கொண்டு அதை விடக் குறைந்த அதிகாரங்களைப் பகிரப்போகிறாரா என்பதை ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறவேண்டும் இவ்வாறு தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
"1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தமே 13ஆம் திருத்தச் சட்டமாக இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றது. இதனை செயற்படுத்துவதை மேற்பார்வை செய்யவென இந்திய அரசு தனது அமைதிகாக்கும் படையை இலங்கைக்கு அனுப்பி வைத்தது.
ஆரம்பத்திலிருந்து பலவகையான எதிர்ப்புக்கள் இந்தச் சட்டத்துக்கு எதிராகக் கிளம்பின. அன்று தொடக்கம் இன்றுவரை சிங்கள அரசியல் தலைமைத்துவங்களின் மெத்தனத்தினால் மாகாண சபைகளுக்கு சேரவேண்டிய அதிகாரங்கள் பகிரப்படவில்லை. குறிப்பாக எந்த மக்களுக்காக அது விசேடமாக கொண்டுவரப்பட்டதோ அந்த வட கிழக்கு மக்களுக்கு அது உதவவில்லை. 1988இல் தெரிவு செய்யப்பட்ட முதல் வடகிழக்கு மாகாணசபை 1990ஆம் ஆண்டிலேயே கொழும்பு அரசால் கலைக்கப்பட்டது. இது நடந்து 17 ஆண்டுகளின் பின்னர் 2007ஆம் ஆண்டில் வடகிழக்கு இணைப்பும் துண்டிக்கப்பட்டது. அதன்பின் முதல் முறையாக தேர்தல் நடத்தப்பட்டு கிழக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டது.
உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஏதோவொரு முறையில் அதிகாரப் பரவலாக்கல் நிகழ்ந்திருக்கின்றது. நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதனால்தான் அதிகாரப்பரவலாக்கல் வேண்டும் என்கின்ற கோரிக்கையைத் தமிழ் மக்கள் முன்வைத்தனர்.
இதேவேளை மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, 13ஆம் திருத்தச் சட்டத்துக்கும் அதிகமான அதிகாரங்களைத் தீர்வாகத் தரப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால் அவரது சகோதரரான புதிய ஜனாதிபதி 13ஆம் திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்களைக் கூட தரமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.
அப்படியானால் அவர் எந்தவகையான தீர்வினை தமிழ் மக்களுக்கு வழங்கப்போகிறார் என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும். 13ஆம் திருத்ததில் சொல்லப்பட்டதை விடவும், மேலதிகமாக அதிகாரங்களைப் பகிரப்போகிறாரா? அல்லது 13ஆம் திருத்தச் சட்டத்தில் இருப்பதையும் எடுத்துக் கொண்டு அதை விடக் குறைந்த அதிகாரங்களைப் பகிரப்போகிறாரா என்பதை ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறவேண்டும்-என்றுள்ளது. (ம)

## பழிக்குப்...

ஈரானின் இராணுவத் தளபதியும் முக்கிய போர்ச் சூத்திரதாரியுமான காசிம் சுலைமான் அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து, பழிக்குப் பழியாக இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது-ஈரான்.
ஈரான் படையின் தளபதி காசிம் சுலைமானைக் கடந்த 3ஆம் திகதி பாக்தாத் விமான நிலையத்தில் அமெரிக்க ராணுவம் ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணை வீசிக் கொன்றது. இந்தத் தாக்குதலில் காசிம் சுலைமான் அவரின் மருமகன் முகந்தியாஸ் உள்பட 8 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி தருவோம், பழிக்குப் பழிவாங்குவோம் என்று ஈரான் அரசு சூளுரைத்தது. இதன் தொடர்ச்சியாக நேற்றைய தாக்குதலை ஈரான் அரங்கேற்றி முடித்துள்ளது.
22 ஏவுகணைகள் மூலம் அமெரிக்கப் பயங்கரவாதிகளுக்கு எதிராக (அமெரிக்கச் சிப்பாய்கள்) இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளோம். குறைந்தது 80 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்கா எதிர்வினையாற்றினால் பெரும் அழிவைச் சந்திக்க வேண்டிவரும் என்று ஈரானின் அதிபர் அயத்துல்லா எச்சரித்துள்ளார்.
ஈரானின் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. இராணுவத் தளபாடங்களுக்குச் சிறு சேதம் மட்டுமே ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ம)

விற்பனைக்கு
பழைய வேலைப்பாடுடைய மரத்தளபாடங்கள், கல்லுரல், ஆட்டுக்கல் என்பன விற்பனைக்குண்டு.
109/8, சிவன் புதுவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 573 2563, 076 808 1772

வீடு வாடகைக்கு
துன்னாலையில் நெல்லியடி- கொடிகாமம் வீதியில் உட்புறமாக சகல வசதிகளுடன் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. குடியிருக்க, தொழில்துறை என்பவற்றிற்கு உகந்த இடம்.
021 226 2972, 077 919 7587, 071 641 9047

காணி விற்பனைக்கு
உடுப்பிட்டி கோவிற்பற்று கரணவாய் மேற்கில் "கித்யோடை", "குருந்து நின்ற செம்பாடு" நிலப்பரப்பு 21 உடனடியாக விற்பனைக்குண்டு தென்னைகள், ஈரப்பிலா கன்றுகள், தண்ணீர் வற்றாத வெட்டுக் கிணறு, சிறிய கல்வீடு, பயிர்செய்யக்கூடிய நிலம் உள்ளடங்கலாக அமையப்பெற்ற காணி.
தொடர்பு:
வே.தம்பிப்பிள்ளை "ஸ்ரீ பதி இல்லம்",
அல்வாய் கிழக்கு, இலகடி, அல்வாய்

வடக்கில் இடம்பெறும் மிகப் பாரிய பல்துறை வர்த்தக கண்காட்சி
11 ஆவது யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2020
2020 ஜனவரி 24 – 26
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
JITF 2020
உங்களது கண்காட்சிக்கூடங்களை இப்போதே முற்பதிவு செய்து கொள்ளுங்கள்
Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com
www.jitf.lk
jitf.lk



- மோட்டார் வாகனத் தொழிற்துறை
- நிர்மாணத் தொழிற்துறை
- ஆடைத் தொழிற்துறை
- விருந்தோம்பல் தொழிற்துறை
- விவசாயத் தொழிற்துறை
- பிரயாணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை
- உணவு பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்துறை கல்வி
- நிதியியல் சேவைகள் மற்றும் நிறுவனங்கள்
- நுகர்வோர் பொருட்கள் மற்றும் பல

PLATINUM SPONSOR
INSEE CEMENT
OFFICIAL PARTNERS
DSI DIMO LECS

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா பயிற்சியகம்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பெற்றது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 19.01.2020 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 20.01.2020 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**இன்று பஞ்சரத பவனி**
**காண்போம் வாரீர்...!!**



# ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி

எம்.பி.அருளானந்தன்

ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவவழிபாடு நிலவி வந்துள்ளமையை வரலாற்று ஆதாரங்கள் நிரூபிக் கின்றன. இதனாலேயேதான் ஈழம் சிவபூமியென திருமூலரால் போற்றப்பட்டது. இராவணன் எனும் இலங்கை மன்னன் சிவ பக்தன். இவனைத் திருஞானசம்பந்தர் "இராவணன் மேலது நீறு" என எடுத்து ஓதுவதிலிருந்து இராவணன் காலம் முதலாக ஈழத்தில் சைவநெறியே போற்றப்பட்டு வந்ததென்பது உண்மை. மேலும் அழகமர் மண்டோதரிக்கும் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்" என மணி வாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறுவது இதனை மேலும் வலியுறுத்தும். மண்டோதரி இராவணனின் மனைவியாவாள். இராவணன் காலத்திலிருந்தே சிவாலயங்களும் உருப்பெற்று நிலவி வந்துள்ளன. இதற்கோர் எடுத்துக்காட்டாக இன்றும் நிலவுவது திருக்கோணமலையாகும். இத்தகைய பெருமைமிக்க இலங்கையில் தொன்றுதொட்டு இன்றுவரை பல்வேறு சிவாலயங்கள் உருப்பெற்று வழிபாடாற்றப்பட்டு வருகின்றன.

**ஈழத்துச் சிதம்பரம்**

இத்தகைய சிவாலயங்களி லொன்றாக ஈழத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காரைநகரில் சிறந்து விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் கோவிலாகும். இந்தக் கோயிலை என்றும் நினைவுபடுத்தும் வகையில் ஈழத்தில் இருக்கும் சிவஸ்தலம் ஈழத்துச் சிதம்பரம்.



இந்தத் திருத்தலம் காரைநகர் ஈசான மூலையில் பரந்தகன்ற பெருவெளியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக விளங்குகின்றது.

பக்தியும் ஆசாரமும் விளங்க அருள் பாலிக்கும் சிவப்பதியாக ஈழத்தில் இவ்வாலயம் விளங்குகின்றது.

ஆண்டி முனிவரின் சித்தும் அம்பலவி முருகனின் தியாகமும் இணைந்தே இந்த ஆலயம் தோற்றம் பெற்று இன்று பெருவளர்ச்சி கொண்டு விளங்குகின்றது.

**ஆண்டி கேணி ஐயனார்**

இங்கே சிவனுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயனார் ஓர் அற்புத மூர்த்தியாக என்றும் விளங்கு கின்றார்.

ஆண்டி முனிவர் ஆலயத்தின் தென். கிழக்கு மூலையைத் தோண்டிய பொழுது தோன்றியவரே ஐயனார் அதனால் ஆண்டிகேணி ஐயனார் என்ற திருநாமம் பெருமானுக்கு ஏற்பட்டது.

**"தில்லைக் கூத்தனின் தரிசனம்"**

ஈழத்து சிதம்பரம் என்ற மகிமைக்கு காரணம் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமானும் அவனுக்கு இடம் பெறும் வழிபாடுகளும் தான். காண வீடு பேறளிப்பது சிதம்பரம் ஆனந்த நடராசனின் திருவடிவம் திருவைந்தெழுத்தால் ஆனவை என்பர். சிதம்பரம் தவிர ஏனைய ஆலயங்களுள் காணப்படுபவை திருவைந்தெழுத்தால் ஆனவை அல்ல. அவை மகேஸ்வர வடிவங்கள் இருபத்தைந்தினுள் ஒன்றே என்றும் ஆய்வாளர் கூறுவர். அவ்வாறாயின் ஈழத்துச் சிதம்பர நடராசரும் அவ்வாறானவரே. ஓங்காரமான வடிவமே திருவாசி ஐம்பத்தொரு சுடர்களும் அட்சரங்களாகும்.

ஆடல் வல்லானின் திருவுருவம் கலையம்சத்துடன் காட்சியளிக்கின்றது. நடராஜப் பெருமானின் திருவாசியில் ஐம்பத்தொரு சுடர்கள் இருப்பது தனித்துவமான சிறப்பாகும். இவை ஐம்பத்தொரு அட்சரங்களைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளும் ந.வச்சிர .வேலு முதலியார், சிங்கார வேலன், பாஸ்கரத் தொண்டமான், திருக்கயிலாய பரம் பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குருமகா சன்னிதானம், தருமை ஆதீனம், முனைவர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், பேரூர் ஆதினம் போன்றோர் தமிழ் நாட்டிலேயே ஒருசில ஆலயங்களில்தான் இத்தகைய அழகிய பதஞ்சலி வியாக்கிறபாதரோடு கூடிய மூர்த்தியைத் தரிசித்து விமர்சித்துள்ளார். திருவாவடுதுறை குருமகா சன்னிதானம் எழுந்தருளி ஆடல் வல்லான் அருட்கோலம் கண்டு வழிபட்டு ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் திருமுடி திரிசடையாக அல்லாமல் உச்சிக்கொண்டையாக அமையப் பெற்றது தனிச் சிறப்பு என ஆதீன வெளியீடான மெய்கண்டானில் சிறப்பாக எழுதி உள்ளார்.

**பஞ்சரத பவனி**

ஈழத்துச் சிதம்பரத்தில் மூன்று மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மார்கழித் திருவாதிரையே மிகச் சிறப்பான உற்சவம். திருவாதிரையில் பஞ்சரத பவனியையும் பின் நடராஜப் பெருமானுக்கு 'ஆருத்திரா' அபிஷேகத்தையும் கண்டு ஆனந்தமடைபவர்கள் ஏராளமானவர்கள். இத்தகு மகத்துவ தரிசனம் ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனியாக கொண்டாடப்படுகின்றது.

ஈழத்து சிதம்பர ஆடல்வல்லான் செளந்தராம்பிகை சகிதம் 39 அடி உயரமான, நாகரவடிவிலமைந்த ஐந்து தளங்களைக் கொண்ட, 108 சிவத்தாண்டவங்களோடு 63 நாயன்மார்கள், 25 மகேஸ்வர மூர்த்தங்கள் எல்லாம் ஒழுங்கே அமையப் பெற்ற திருத்தேரில் பவனிவருகின்ற சிதம்பர தரிசனம் நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல சிதம்பர சுந்தரேசன் ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வினையும் சமாதான வாழ்வையும் தர வேண்டுமெனப் பிரார்த்தித்துச் சிவன் கழல் தொழுது வேண்டுவோம். ■



ஈழத்துச் சிதம்பரத்தில் மூன்று மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மார்கழித் திருவாதிரையே மிகச் சிறப்பான உற்சவம். திருவாதிரையில் பஞ்சரத பவனியையும் பின் நடராஜப் பெருமானுக்கு 'ஆருத்திரா' அபிஷேகத்தையும் கண்டு ஆனந்தமடைபவர்கள் ஏராளமானவர்கள். இத்தகு மகத்துவ தரிசனம் ஈழத்து சிதம்பரத்தில் பஞ்சரத பவனியாகக் கொண்டாடப்படுகின்றது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அடி அங்கே, வலி இங்கே!!

இன்னொரு வளைகுடாப் போருக்கான அறிகுறிகள் மிகப் பலமாகத் தென்படத்தொடங்கி விட்டன. வெறுமனே அறிக்கைகளாலும், ஏட்டிக்குப் போட்டியானதடை விதிப்புகளாலும் மோதிக்கொண்டிருந்த அமெரிக்காவும், ஈரானும் இப்போது களத்தில் இறங்கி 'அடிபடுவதற்கு' தயாராகிவிட்டன. கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் சம்பவங்கள், அப்படியான நிலையையே தோற்றுவித்துள்ளன.

சதாம் ஹூசைனைக் கொன்று, ஈராக்கைத் தன்பிடிக்குள் கொண்டுவந்த கையோடு அமெரிக்காவின் பார்வை ஈரானின் பக்கமே இருந்தது. ஆனாலும் அப்போதைக்கு ஈரான் மீது தாக்குதல் தொடுத்து , அங்குள்ள எண்ணெய்க்கிணறுகளையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவர சரியான சாட்டு ஏதும் கிடைக்கவில்லை. அதனால் தருணம் பார்த்து அமெரிக்கா காத்திருந்தது. ஈராக்கைப் போல வெறுமனே குரைத்து விட்டு, அடி வாங்கும் நாடல்ல ஈரான். அமெரிக்கா தன்னைக் குறி வைத்திருப்பதை அறிந்ததும் ஈரான் மளமளவென்று காரியத்தில் இறங்கியது. "அமெரிக்கா அணுவாயுதம் இருக்கும் திமிரில் தானே இந்த ஆட்டம் போடுகின்றது, ஆகவே நாமும் அதே அணுவாயுதத்தை கையில் எடுப்போம்" என்று சத்தமிடாமல் அணுச்செறிவூட்டல் உலைகளை அமைத்து, அந்தத் தொழில்நுட்பத்தில் மிகத்துரிதமாக ஈரான் வளரத் தொடங்கியது. இவையெல்லாம் நடந்து, வெள்ளம் தலைக்கு மேல் போன பின்னர் தான் அமெரிக்கா விழித்துக் கொண்டது, தான் ஒரு திட்டத்தைப் போட்டு வைக்க , ஈரான் அதற்குப் பதிலடியாக இன்னொரு திட்டம் போட்டு, தப்பித்துக் கொண்டதை அமெரிக்காவால் ஜீரணிக்க முடியவில்லை.

அணுச்செறிவூட்டல் உலைகளை மூடும்படி ஈரானுக்கு அழுத்தம் கொடுத்தது அமெரிக்கா. ஈரானோ அதற்கு மசியவில்லை. உடனேயே பொருளாதாரத்தடை என்ற புராதன காலத்துப் பொறிமுறையைக் கையில் எடுத்தது அமெரிக்கா. ஐ.நாவும் அமெரிக்க விசுவாசத்தைத் தன் பங்குக்கு காட்ட, கொஞ்சம் கீழிறங்கச் சம்மதித்து அணுச்செறிவூட்டலைக் குறைத்ததாகக் காட்டிக் கொண்டது ஈரான். வெளியில் அப்படிச் சொல்லிக் கொண்டாலும், இரகசியமாகவும், துரிதமாகவும் அணுவாயுதத் தொழினுட்பத்தில் ஈரான் வளர்ச்சி நிலையை எட்டியது.

எப்போதும் பலமற்றவனை அடிப்பதில் நாம் காட்டும் ஆர்வத்தை பலமுள்ளவனிடம் காட்ட ஒருகணம் யோசிப்போம். இதேநிலைதான் அமெரிக்காவுக்கும். முன்னர் என்றால் ஈரான் பிள்ளைப் பூச்சி. ஒரு அடியோடு 'பொட்டென்று "போட்டுத் தள்ளி இருக்கலாம். ஆனால் இப்போதோ அந்தப் பிள்ளைப் பூச்சிக்கு அணுவாயுதப் பலம் என்ற கொடுக்கு முளைத்து அமெரிக்காவோடு மல்லுக்கட்டும் அளவுக்கு வந்துவிட்டது. வல்லரசு நாடுகள் ஈரானுடன் செய்திருந்த ஒப்பந்தத்தில் இருந்து 'திடுதிடுப்'பென சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி, மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து அமெரிக்கா. இப்படிப்பட்ட நிலையில் இடைக்கிடையே ஈரானோடு 'சொறிச்சேட்டை' விடுவதென்பது அமெரிக்காவுக்குப் பிடித்தமான பொழுதுபோக்காக மாறியது. எவ்வளவுகாலம் தான் ஈரானாலும் பொறுக்க முடியும்? ஒரு கட்டத்தில் அத்துமீறி நுழைந்து, தகவல்களை மோப்பம் பிடிக்கும் ஆளில்லா உளவு விமானங்களை , ஈரான் நுளம்பை அடிப்பது போல அடித்து விழுத்தியது. பதிலுக்கு பொருளாதாரத்தடைகளை இன்னும் இறுக்கிய பின்னும் ஆத்திரம் தீராத அமெரிக்கா, ஈரானின் படைத்தளபதிகளுள் முக்கியமானவரான காசிம் சுலைமானை, துல்லியமான ஏவுகணைத் தாக்குதல் மூலம் கொன்றது. இதையடுத்து இதுநாள்வரை சாம்பல் படர்ந்து கனன்று கொண்டிருந்த பகை நெருப்பு சுவாலையோடு எரியத்தொடங்கி விட்டது. தளபதி காசிம் சுலைமானின் இறுதிச் சடங்கு முடிந்த சிலமணி நேரத்துக்குள் , ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளம் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தி, 80க்கும் மேற்பட்ட அமெரிக்கப் படைகளைக் காவு வாங்கி, பழி தீர்த்திருக்கிறது ஈரான். கடந்த ஒரு தசாப்தத்தில் இவ்வளவு பெருந்தொகையான அமெரிக்கப்படையினர் ஒரே நாளில் கொல்லப்பட்டிருக்கவில்லை. எனவே தனக்கு நிகழ்ந்த பேரழிவுக்கு தானும் ஒரு பதிலடியை அமெரிக்கா கொடுக்க, அதற்கு ஈரானும் திருப்பிக் கொடுக்க, இப்படி பதிலடிகளாலேயே பதறப்போகின்றது வளைகுடா. சிலவேளைகளில் இந்தப்போர் மூன்றாம் உலகப்போருக்கான தொடக்கமாக இருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

சரி, இவ்வளவும் எங்கோ தொலைவில் உள்ள ஈரானோடும், அமெரிக்காவோடும் சம்பந்தப்பட்டதுதானே என்று நாமும் ஒதுங்கிப் போய்விட முடியாது, வளைகுடாப் போர் தொடங்கினால் , எரிபொருள் முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். உலக நாடுகள் அமெரிக்கா பக்கமாகவும், ஈரான் பக்கமாகவும் இரு அணிகளாகப் பிரிவதால் உண்டாகும் அரசியல் குழப்பங்கள் இலங்கை போன்ற , தங்கியிருக்கும் நாடுகளையும், அவற்றின் அபிவிருத்தியையும் உடனடியாகப் பாதிக்கவே செய்யும். ஈரானும், அமெரிக்காவும் அடித்துக் கொண்டாலும் அந்த வலியில் ஒரு பங்கை நாமும் அனுபவிக்க வேண்டிய கட்டாயம். என்ன செய்வது, தென்னைக்குத் தேள் கொட்ட, பனைக்கு நெறி கட்டும் காலமிது.

# 151 பேர் முயற்சி 39 பேர் உயிரிழப்பு



*கிளிநொச்சி, ஜன.9*

**கிளிநொச்சி மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் மட்டும் 151 பேர் தவறான முடிவுகளை எடுத்து தங்களது உயிரை மாய்க்க முயற்சித்துள்ளனர். அவர்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மாவட்டத்தில் இந்த நிலைமை 2019 ஆம் ஆண்டு 27 வீதமாகக் காணப்பட்டாலும், 2018 ஆம் ஆண்டு 36 வீதமாக இருந்துள்ளது.

4 பிரதேச செயலர் பிரிவுகளிலும், 46 ஆயிரத்து 694 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 928 அங்கத்தவர்கள் வாழும் கிளிநொச்சி மாவட்டத்தில் 151 பேர் கடந்த வருடம் உயிரை மாய்க்க முயற்சித்துள்ளனர் என்று புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்கும் விகிதம் ஆண்டுக்கு தேசிய ரீதியில் 13 வீதமாகக் கானப்படுகின்ற போதும், ஒரு லட்சம் பேரில் 13 பேர் உயிரை மாய்க்கின்றனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-105)

## விக்னேஸ்வரன் இந்தியா பயணம்

*யாழ்ப்பாணம், ஜன. 9*



வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் நாட்டில் இடம்பெறும் நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக இன்று அதிகாலை இந்தியாவுக்குப் பயணமானார்.

தமிழ்நாட்டில் மரபுரிமை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் அவர் சிறப்புரையாற்றவுள்ளார். இந்த நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அங்கிருந்து எதிர்வரும் 13 ஆம் திகதி அவர் நாடுதிரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

## காணாமலாக்கப்பட்டவர்களின் பின்னுரித்தாளர்களே பெற்றுக்கொள்ளலாம்

*மூளாய், ஜன. 9*

யாழ்ப்பாண மாவட்டத்தில் போர்க் காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை அவர்களுடைய பின்னுரித்தாளர்களுக்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.


இதன் முதற்கட்டமாக காணாமலாக்கப்பட்டதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை கணிசமானவர்களுக்கு இதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் மாதாந்தக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கமுடி யும்.

காணாமல் போனவர்களின் நேரடி பின்னுரித்தாளர்களே மாதாந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

# பொங்கலுக்குப் பின் நெல் அறுவடை

*யாழ்ப்பாணம், ஜன. 9*



யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை தைப்பொங்கலுக்குப் பின்னர் முழுமையாக ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வலிகாமம் மேற்குப் பிர தேசத்தில் நெற்செய்கைக்கான அறுவடை கடந்த வாரம் பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கூடுதலாக மேட்டு நிலங்களில் நெற்செய்கையில் ஈடுபட்ட அநேகமான விவசாயிகள் அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

தைப்பொங்கலுக்கு பின்னரான காலப் பகுதியில் அநேகமான செய்கையாளர்கள் அறுவடையை ஆரம்பிப்பர்.

வலிகாமம் வடக்கு, தென்மராட்சி, வடமராட்சி, தீவுப்பகுதி போன்ற இடங்களில் அறுவடை ஆரம்பிக்கப்படும். அறுவடை செய்வதற்கு வன்னிப் பகுதியில் இருந்து கூடுதலான அறுவடை இயந்திரங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன.

இந்த முறை பெரும்போக நெற்செய்கைக்கு ஏற்றவாறு மழை பெய்தமையால், கணிசமான அளவிலான விளைச்சலை செய்கையாளர்கள் எதிர்பார்த்துள்ளனர். தற்போது நெல்லுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விலையும் அதிகரித்துள்ளது.

தைப்பொங்களுக்கு பின்னர் அதாவது தைப்பூசத்துக்கு பின்னரான காலத்தில் நெல் பற்றாக்குறை நீங்கிவிடும் என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர். (க-17)



# வடக்கின் புதிய ஆளுநரும் அவர் மீதான எதிர்பார்ப்பும்



■ இந்துமதி

வடக்கு மக்களின் ஏக்கங்களையும், தேவைகளையும் நிறைவேற்றி வைக்கும் பொருட்டு வடக்கு மாகாணத்தின் ஆளுநராக ஜனாதிபதி தம்மை நியமித்துள்ளார் எனத் தெரிவித்த வடக்கின் புதிய ஆளுநரான திருமதி பீ.எஸ்.எம். சாள்ஸ், இரவு பகல் பார்க்காது வடக்கு மக்களுக்குச் சேவையாற்றத் திடசங்கற்பம் பூண்டுள்ளேன் எனக் கூறியுள்ளார்.

**வடக்கின் தேவைகள்**

வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் அங்கு வாழ்கின்ற மக்களின் வலிகளையும், வேதனைகளையும் நன்கறிந்து கொண்டவர். அதுமட்டுமல்லாது வடக்கு மக்களின் தேவைகளும் அவருக்கு நன்கு புரியும். ஒரு தமிழ் மகளான அவர் நிர்வாக சேவையின் உச்சத்தைத் தொட்டவர். பல உயர்ந்த பதவிகளை அலங்கரித்தவர். நிர்வாகத் திறமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர். அவர் மீதான மதிப்பு மற்றும் எதிர்பார்ப்புக் காரணமாகவே உயர் அந்தஸ்தை வகிக்கின்ற வடபகுதியைச் சார்ந்தவர்கள் பலரும் ஒன்று சேர்ந்து மகத்தான வரவேற்பை அவருக்கு வழங்கியுள்ளனர். இதற்குத் தமது மனப்பூர்வமான நன்றிகளைப் புதிய ஆளுநர் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாது மிகப் பெரிய பொறுப்புத் தம்மீது சுமத்தப்பட்டுள்ளதையும் அவர் புரிந்து கொண்டுள்ளார் எனத் தெரிகின்றது.

**முன்னைய ஆளுநர்கள்**

முன்னர் பதவி வகித்த ஆளுநர்கள் மக்களுக்கான சேவைகளை முழு அளவில் நிறைவேற்றி வைத்தார்களெனக் கூற முடியாது. அநேகமாக அரசின் ஆணைகளை நிறைவேற்றி வைப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டனர். புதிய ஆளுநரின் வரவேற்பு நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கூறியதைப் போன்று சில அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாகச் செயற்படுகின்ற மனப்போக்கும் அவர்களிடம் காணப்பட்டது. இது அவர்களின் சேவையில் பாதிப்பை ஏற்படுத்திவிட்டதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். புதிய ஆளுநர் இந்த நிலையிலிருந்து மாறி தற்துணிவுடன் செயற்படுவார் என எதிர்பார்ப்போம்.

**பல தேவைகள்**

வடக்கின் புதிய ஆளுநர் கவனிக்க வேண்டிய விடயங்கள் ஏராளமாக உள்ளன. மக்கள் தமது குறைகள் தொடர்பாக அரச திணைக்கள தலைவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பிக்கின்ற போது அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குறை உடனடியாகவே நிவர்த்திசெய்யப்பட வேண்டியதொன்றாகும். இத்தகைய கடிதங்களின் பிரதிகள் ஆளுநருக்கு அனுப்பி வைக்கும் போது அவர் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். கடந்த அரசின் காலத்தில் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் பல உரிய நிதி விடுவிக்கப்படாமையால் அரைகுறையான நிலையில் காணப்படுகின்றன. தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் பயனாளிகள் தமக்கு வழங்கப்பட்ட வீடுகளை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளனர். இதனால் அதிக வட்டிக்குக் கடன்பட்டும், நகைகளை அடைவு வைத்தும் பணத்தைப் புரட்டியுள்ளனர். ஆனால் அரசு நிதியை விடுவிக்காததால் மிகுந்த சிரமங்களையும், மனவேதனைகளையும் அடைந்து வருகின்றனர். இந்த நிலையைப் போக்குவது மிகவும் முக்கியமானது. மற்றும் வீடுகளைப் புனரமைப்பதற்கென வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்படும் கடன்தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதும் பயனாளிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பலருக்கு முதற்கட்டமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மீதிப் பணத்தை வழங்குவதில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு உள்ளூர் அதிகாரிகள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றதைக் காரணமாகக் கூறினார்கள் இனிமேல் நாடாளுமன்றத் தேர்தலை ஒரு காரணமாகக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

**நியாயமான செயல் அல்ல**

ஆனால் சாக்குப் போக்கான காரணங்களைக் கூறி இந்த அப்பாவி மக்களை அலைக்கழிக்க வைப்பது நியாயமான செயல் அல்ல. குறித்த நிதி கிடைக்காததால் வீடுகளை அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தொடர் மழையால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பலரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

வெள்ளநீரில் இவர்களது வாழ்வு கரைந்து போனது. தேசிய வீடமைப்பு அதிகார சபையின் புதிய தலைவர் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட நிலையில் உரிய கொடுப்பனவுகளை இனியும் தாமதிப்பது நியாயமானதல்ல மேலும் பிரதமரின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபை வருவதால் அவருடன் தொடர்புகொண்டு உரிய நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை வடக்கு ஆளுநர் விரைந்து செய்ய வேண்டும். வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள பல வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் அவற்றில் பயணங்களை மேற்கொள்கின்ற பொது மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையைப் போக்கி பாதிக்கப்பட்ட சகல வீதிகளும் புனரமைக்கப்படல் வேண்டும். ஆளுநர் இதில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

**அச்சம் நீக்கப்பட வேண்டும்**

மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் வன்முறையற்ற அச்சமில்லாததொரு சூழ்நிலையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் போரின் பின்னரான காலப்பகுதியில் வடக்கு மாகாணம் கொள்ளை, திருட்டு, அடாவடித்தனங்கள், வாள் வெட்டுக்கள், கொலைகள் ஆகியனவற்றுக்குப் பஞ்சமில்லாத நிலைக்கு மாற்றம் பெற்றது. இளவயதினரே இவற்றில் ஈடுபடுவதையும் காணமுடிகின்றது. இவை அடக்கி ஒடுக்கப்படுமென காலத்துக்குக்காலம் கூறப்பட்டாலும் அவற்றை இன்றளவும் முற்றாக ஒழிக்க முடியவில்லை. இதனால் மக்கள் அச்சத்துடனேயே வாழவேண்டியுள்ளது. புதிய ஆளுநர் இந்த விடயத்தில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு மக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ்வதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

**விவசாயிகளின் பிரச்சினைகள்**

வடபகுதி விவசாயிகள் எதிர்கொள்கின்ற அவலங்களுக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண வேண்டியதும் புதிய ஆளுநரின் முக்கிய பொறுப்பாகும். தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வடபகுதி விவசாயிகள் பயிரழிவுகளை எதிர்கொண்டனர். இவர்கள் தமக்கு ஏற்பட்ட நட்டங்களிலிருந்து மீள வேண்டுமானால் அவர்களுக்குரிய நட்டஈடுகளை அரசு வழங்குதல் வேண்டும். வடக்கு ஆளுநர் இந்த விடயத்திலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு விவசாயிகளின் துயரைத் துடைத்தல் வேண்டும். மேலும் வடபகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு உரிய சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். குடாநாட்டின் நிலத்தடி நீர் பல்வேறு வகையிலும் மாசடைந்து காணப்படுவதால் இங்கு வாழ்கின்ற மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு இதுவரையில் நிரந்தரமான தீர்வு எதுவும் காணப்படவில்லை. புதிய ஆளுநர் இந்த விடயத்துக்கும் முன்னுரிமை வழங்கி குடாநாட்டு மக்களின் தாகத்தைப் போக்க வேண்டும். வடபகுதியைப் பொறுத்தவரையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவற்றுள் பல குடும்பங்களுக்கு உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. இதை ஆராய்ந்து வறிய மக்கள் அனைவருக்கும் உரிய உதவிகளை வழங்குவது ஆளுநரின் முக்கிய பொறுப்பாகும்.

இவ்வாறு மேலும் ஏராளமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றுக்குத் தீர்வு கண்டு வடபகுதி மக்களின் துயரைத் துடைத்து அவர்களின் மனங்களில் வடக்கின் புதிய ஆளுநர் இடம்பெறுவாரா? நம்பிக்கையுடன் காத்திருப்போம்! ■

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன. 9
நல்லை க.கண்ணதாஸ் எழுதிய "பஞ்ச கதிகள்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


வடக்கு மாகாண கல்வித் திணைக்கள(அழகியல்) உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த மிருதங்க ஆசான் தண்ணுமை வேந்தன் மா.சிதம்பரநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்பபாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கலாபூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

## சங்காபிஷேகம்

சாவகச்சேரி,ஜன. 9
சாவகச்சேரி பொதுச்சந்தை குபேர கணபதி ஆலயத்தில் சங்காபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.
சாவகச்சேரி நகர வர்த்தகர்களும், பொதுச் சந்தை வியாபாரிகளும் இணைந்து சங்காபிஷேக உற்சவத்தை நடத்தவுள்ளனர். (ஐ-9)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.9
2019 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.




# வடக்கின் நீர் நிலைகள் அதிகாரிகள் கள ஆய்வு

**யாழ்ப்பாணம்,ஜன.9**
**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நீர் நிலைகளில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் கள ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர்.**



யாழ்ப்பாணத்தில் தொண்டமானாறு மத்தொணி மற்றும் அச்சுவேலி உப்பாறு ஆகிய நீர்நிலைகளுக்கு நேரடியாகச் சென்ற அதிகாரிகள், இரண்டு நீர் நிலைகளிலும் தலா 20 இலட்சம் மீன் குஞ்சுகளையும், 20 இலட்சம் இறால் குஞ்சுகளையும் இடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.
அதேவேளை பூநகரி செட்டியார் குறிச்சி, மற்றும் குறிஞ்சி 1, குறிஞ்சி 2 ஆகியவை உட்பட்ட சில களப்புக் களை ஆழமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.
அதனடிப்படையில் அங்கு கள ஆய்வுகளை மேற்கொண்ட அதிகாரிகள், பூநகரி செட்டியார் குறிச்சி களப்பை இந்த வருட இறுதிக்குள் முழுமையாக ஆழமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச மக்களிடம் தெரிவித்தனர்.
அத்துடன் நாச்சிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள கிறஞ்சி 1 மற்றும் கிறஞ்சி 2 ஆகிய களப்புகளையும் ஆழமாக்கி இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.
இரணைமாதா நகர் இறங்கு துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராய்ந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உதவிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாற்றில் காணப்படுகின்ற மண் திட்டுக்களை அகற்றுவது தொடர்பாக அந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று அதிகாரிகள் ஆராய்ந்தனர். அதனை அகற்றுவதற்கு கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டிய நடைமுறைத் தேவை இருப்பதன் காரணமாக, அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச உதவிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தினர்.
களப்புக்களை ஆழமாக்கும் செயற்பாடுகனிலும், அகழப்படுகின்ற மணல்களைக் கொட்டுவது தொடர்பாகவும் மாவட்டச் செயலர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளமையால் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தினர்.
களஆய்வுப்பணிகளில்கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜி. கஹாவத்த, கடற்றொழில் உத்தியோகத்தர் எஸ். சிவதர்ஸன், களப்பு அபிவிருத்தித் திட்ட அதிகாரி மஹிந்த மற்றும் பொறியியலாளர் ஆரியரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர் என்று அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கையிலாய வாகனம் மற்றும் சப்பறம் ஆகியவற்றின் வெள்ளோட்டம் கடந்த வாரம் இடம்பெற்றபோது.... (க-131)

## பொங்கல்விழா

யாழ்ப்பாணம்.ஜன.9
அளவெட்டி முற்போக்கு சனசமூக நிலையத்தின் பொங்கல்விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம் பெறும்.
தலைவர் க.கயூரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விளையாட்டு மற்றும் பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெறும். (க-63)

## தேர்த் திருவிழா

மட்டுவில்.ஜன.9
மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
ஆலய பிரதம குரு சிவசிறி சிறிராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஐ-131)

## பஜனை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன.9
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் 48 ஆவது வருடாந்தப் பஜனை ஊர்வலம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
காலை 7 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்பட்டு சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார்கோயிலைஅடைந்து, மீண்டும் அங்கிருந்து மாலை 3 மணிக்கு புறப்பட்டு கோயிலை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-50)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மருதடி ஜே.77 கிராம அலுவலர் பிரிவுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதடி கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறும்.
க.கணபதி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் மருதடி முதியோர்கள், சங்க உறுப்பினர்கள், புதிதாகமுதியோர் சங்கத்தில் இணைந்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# சிறுமியை வன்புணர்வோம்; அச்சுறுத்தி கொள்ளை



## 25 பவுண் நகை, பணம் அபகரிப்பு

தலைமன்னார், ஜன. 9

அதிகாலை வீடு புகுந்த கொள்ளையர் அங்கிருந்த தம்பதியரைத் தாக்கியதோடு, சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்துவோம் என்று அச்சுறுத்தி 25 பவுண் நகைகளையும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் எழுத்தூர் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடமைபுரியும் ஓர் ஊழியர் மனைவி மற்றும் 14 வயது மகளுடன் வசித்து வருகின்றார்.

ஐந்து பேர் கொண்ட கொள்ளைக் குழு வீட்டுக் கதவை உடைத்து நுழைந்து அச்சுறுத்தித் தாக்கி கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

கொள்ளையரில் ஒருவர் குரங்கு முகத்தோற்றமுடைய தொப்பி அணிந்திருந்தார். அவ்வாறே ஏனையோரும் முகத்தை மறைத்தவாறு நுழைந்தனர்.

கம்பி, தடிகளுடன் வந்த அவர்கள் வீட்டிலிருந்தவர்களின் கை, கால்களைக் கட்டி, வாய்க்குள் துணி திணித்துள்ளனர்.

பின்னர் வீட்டுக்குள் தேடுதல் நடத்தினர். நகைகள் மற்றும் பணம் எங்கே என்று கேட்டுள்ளனர்.

அவர்கள் காட்டத் தயங்கியதால் குடும்பத் தலைவரைத் தாக்கியுள்ளனர். பின்னர் 14 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தவுள்ளோம் என்றுகூறி அச்சுறுத்திச் செயற்பட்டதனால் பெற்றோர் நகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தைக் காண்பித்துள்ளனர்.

பின்னர் 25 பவுணும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் முறைப்பாட்டில் கூறியுள்ளனர்.

அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறும்போது அங்கிருந்த மனைவியையும் சிறுமியையும் அறையில் வைத்துப் பூட்டிவிட்டுக் கணவன் முன்பாக அறைத் திறப்பை வீசிவிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் இரும்புக் கம்பியாலும் தடியாலும் தாக்கப்பட்ட நிலையில் காயமடைந்தார். மனைவியின் வாய்க்குள் துணியைத் திணித்ததாலும் உபாதைக்குள்ளானார். இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

விசாரணை இடம்பெறுகின்றது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (த-60,213)

## திருமஞ்ச உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.9

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் திருவெம்பாவையை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை ஆருத்திரா தரிசனம் மற்றும் திருமஞ்ச உற்சவம் என்பன இடம்பெறும். இன்று பிற்பகல் 4 மணிக்கு சிறப்பு அபிஷேகம் பூசை நடைபெற்று சுவாமி திருமஞ்சத்தில் வீதிவலம் வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு திருவாதிரை உற்சவம், நடேசர் அபிஷேகம் மற்றும் தீர்த்தத் திருவிழா என்பன இடம்பெறும். (க-17)

## புதிய நிர்வாக சபை தெரிவு

அரியாலை ஶ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக நா.குமணதாசன், செயலாளராக கு.உதயசீலன், பொருளாளராக தி.சுஜீபன், உபதலைவராக அ.ஆதவன், உப செயலாளராக ம.நவநீதன் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக க.செந்தில்நேசன், சி.தர்சன், இ.ஶ்ரீகரன், த.அன்பரசன், ந.இராமநாதன், செ.மங்களம் ஆகியோரும், போசகர்களாக சி.சிவநேசன், க.நாகேந்திரம், இ.தங்கத்துரை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

## 7,000 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, ஜன.9

வன்னி மக்கள் காப்பகத்தால் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 7 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.


இந்த நிகழ்வு காப்பகத்தின் தலைவர் சாந்தநீல் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்திலுள்ள வறிய குடும்பங்களை சேர்ந்த 7 ஆயிரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் 105 தமிழ்க் கிராம மாணவர்களுக்கும், 35 சிங்கள கிராம மாணவர்களுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வாரமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிகழ்வில் அமைப்பின் செயலாளர் சிசில்குமார, வவுனியாவுக்கான இணைப்பாளர் சுஜிகரா, அமைப்பின் உறுப்பினர் திலீப்குமார் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)





## இன்றைய நாள்

**மேடம்:** இரக்க குணத்தினால் சிரமம் வரலாம். கவனமுடன் செயல்பட வேண்டும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். குறைந்த அளவில் பண வரவு இருக்கும்.

**இடபம்:** இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியால் வியப்படைவீர்கள். உபரி வருமானம் வந்து சேரும். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** முக்கிய பணியை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச் சுமை ஏற்படும். பணவரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள்.

**கடகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுபநிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயரும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்படலாம். பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்கு பயன்படும்.

**துலாம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழிலில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும். நேரத்திற்கு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும்.

**விருச்சிகம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**தனுசு:** இடையூறு செய்தவர் இடம் மாறிப்போவர். மனதில் புதிய நம்பிக்கை கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மகரம்:** சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும்.

**கும்பம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு அவசியம். சராசரி பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** வாழ்வில் வளம்பெற புதிய திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். வெகு நாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

# ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதில் இழுபறி

## கூட்டணிக்குள் வலுக்கும் முரண்பாடு

*யாழ்ப்பாணம், ஜன. 9*

**தமிழ் மக்கள் கூட்டணியுடனான பங்காளிக் கட்சிகள் சார்பிலும் ஓர் ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கையால் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் வலுப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.**

தீர்மானங்கள் மற்றும் முடிவுகளின்போது ஒருமித்த கருத்தாக அமையும் வகையிலும் ஜனநாயக முடிவை எட்டும் நோக்கில் ஓர் ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்றும் முன்னாள் முதல்வரிடம் பங்காளிக் கட்சிகள் கோரிக்கை விடுத்தன. கொள்கையளவில் அதை சீ.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொண்டார்.

இந்தக் குழுவில் 10 பேர் மட்டுமே இருப்பர் எனவும் அதில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் ஐவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் மூவரும் தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்பவற்றுக்கு தலா ஓர் ஆசனமும் என்று தீர்மானித்த நிலையிலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இதனால் தமிழ்த் தேசியக் கட்சி கடும் அதிருப்தி அடைந்த நிலையில் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலைமையாக இருக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது. இந்நிலையில், ஈ.பி.ஆர்.எல்.எவ் இணங்கினால் அதில் இருந்து ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறலாம் என்று முன்னாள் முதல்வர் தரப்பினர் சுட்டிக்காட்டினர். அதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தயாரில்லை. இதனால் விக்னேஸ்வரன் தனித்து முடிவெடுக்க முயற்சிக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (த-105)

# ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை

*காரைநகர், ஜன. 9*

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த மார்கழித் திருவாதிரை உற்சவப் பெருவிழா கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தின் சிறப்புத் திருவிழாவான பஞ்சரத பவனி இன்று வியாழக்கிழமை இடம்பெறும். காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து, நடேசப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் எழுந்தருளிப் பஞ்சரத பவனி இடம்பெறும். அன்று இரவு 2 மணி தொடக்கம் நடேசர் அபிஷேகமும், மறுநாள் அதிகாலை 6 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் இடம்பெறும். மாலை 5 மணிக்கு இடம்பெறும் திருவூடல் உற்சவத்தை அடுத்து தீர்த்த உற்சவம் இடம்பெறும். (க-250)


கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற 5 ஆம் நாள் திருவிழாக் காட்சி

# பற்றைக் காணிகளுக்குள் கலாசார சீரழிவுகள்

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

*மன்னார், ஜன. 9*

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பெரியகமம் மைதானத்தின் அருகில் உள்ள பற்றைக் காணிகளுக்குள் கலாசாரங்களைச் சீரழிக்கும் வகையில் பல செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதோடு, மன்னார் நகருக்குள் உள்ள பராமரிப்பற்ற காணிகளைத் துப்புரவு செய்யுமாறு பெரியகமம் மைதானத்தை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் நகர சபையின் உறுப்பினர் ஜோசப் தர்மன், அந்தப் பகுதிக்கு நேற்று நேரடியாகச் சென்று மக்களிடம் கலந்துரையாடினார்.

"இளைஞர்கள் இவ்விடங்களில் இருந்து மது அருந்துவதுடன், பாடசாலை மாணவர்களையும் அழைத்து வருகின்றனர். மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கும் தொல்லைகள் கொடுக்கின்றனர். கஞ்சா போன்ற போதைப் பொருள்களும் இவ்விடங்களில் பாவனையில் உள்ளன. முச்சக்கரவண்டிகளில் இளம் பெண்களை அழைத்து வருகிறார்கள், நாங்கள் நேரில் பார்த்து எச்சரித்து அவர்களை அனுப்பியுள்ளோம். திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. எனவே பற்றைக்காடுகளை உடனடியாகத் துப்புரவு செய்து, கலாச்சார சீரழிவுகளைத் தடுக்கவும்" என்று மக்கள் உறுப்பினரிடம் எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த மன்னார் நகர சபை உறுப்பினர், மன்னார் நகர சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த காணி உரிமையாளர்களுக்குத் தகவல் வழங்கப்படும் அல்லது பற்றைகளை நகர சபை அகற்றி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (க-213)



## பொதுக்கூட்டம்

*யாழ்ப்பாணம், ஜன. 9*

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் க.முருகானந்தன் தலைமையில் கூட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-63)

◆ ◆ ◆

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் சிவராஜ சிங்கம் ஜெயகாந்த், சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்கு உடுவில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி மலர்வேணி மகேந்திரராஜா, கௌரவ விருந்தினராக ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி குகவேளினி சோழன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைக்கான தெரிவும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)



## சின்னம் சூட்டும் நிகழ்வு

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொண்டு மாணவ தலைவர்களுக்கான சின்னங்களை சூட்டினார். (ஐ)

## மணிவாசகர் விழா

*காரைநகர், ஜன. 9*

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் ஆரம்பமானது. இன்று வியாழக்கிழமை மூன்றாம் நாளாக நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சுமதி ஸ்ரீசுந்தரராஜா தலைமையில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சபையால் நடத்தப்பட்ட சமயபாடப் பரீட்சையில் ஒவ்வொரு தரம் ரீதியாக முதலிடம் பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் புத்தகப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நேற்று இடம்பெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் சமயச் சொற்பொழிவுகளும், சபை நிறுவுநர் மறைந்த கலாநிதி வைத்தீசுவரக் குருக்களின் நான்காம் ஆண்டு சமர்ப்பண நூலான "ஆண்டிகேணி ஐயனார்" என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றன.

அத்துடன் வைத்தீசுவரக் குருக்கள் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-250)

## திருவாசக இசையர்ச்சனை

*யாழ்ப்பாணம், ஜன. 9*

யாழ். முன்னணிப் பாடகர்களான அழகேசன் அமிர்தசிந்துஜன், அழகேசன் அமிர்தலோஜனன் ஆகியோரது திருவாசக இசையர்ச்சனை நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் வயலின் விரிவுரையாளர் கா.குகபரன், மிருதங்கம் நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் அணிசேர் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

கொழும்புப் பங்குச் சந்தையின் யாழ். கிளை முகாமையாளர் முத்துக்குமாரசுவாமி திலீபன் நினைவாக இடம்பெறும் நிகழ்வில் திலீபன் எழுதிய பங்குச் சந்தைக்கான அறிமுகம் என்ற நூலும் வெளியிடப்படும். (க)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

*காரைநகர், ஜன. 9*

காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கு இன்று வியாழக்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெறவுள்ள தேர்த்திருவிழாவில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக இந்த விடுமுறை தீவக வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறைக்கான பதில் பாடசாலை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

# கல்வியின் ஊடாகத்தான் இனித் தலைவர் வரலாம்

## முன்னாள் உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

**வவுனியா, ஜன. 9**

**நல்ல தலைவர்கள் இருந்த காலங்கள் கடந்துவிட்டன. எங்களுடைய நல்ல தலைவர்களை நோக்கி நாம் ஏங்கிக்கொண்டிருக்கிறோம். அது கல்வியினூடாகவே சாத்தியப்படும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.**

வவுனியாவில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாகாணத்தில் கல்விநிலை கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது முன்னேறிக் கொண்டிருக்கிறது. இவ்வாறான பெறுபேறுகளின் ஊடாகத்தான் எமது மாகாணத்தை தனித்துவமானதாக மாற்றமுடியும். அதற்கான செயற்றிட்டத்தை கல்வியினூடாகவே முன்னெடுக்கவேண்டும்.

தற்போதைய சூழலில் கல்வியின் மூலமே எமது இலக்குகளைச் சரியான முறையில் அடைந்து கொள்ள முடியும். எமது இருப்பைப் பாதுகாக்கும் நோக்கில் கல்வியை நாம் முன்னெடுக்கவேண்டும். அதன் மூலம் வளமான, ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். எனவே பிள்ளைகளின் கனவுகளை, இலட்சியங்களை நன்கு அறிந்து அதன் மூலம் கல்வியில் உயர்ந்துவிட ஒரு காரணியாக பெற்றோர்கள் இருக்க வேண்டும்.

மாறாக எங்களுடைய இலட்சியங்களை பிள்ளைகள் மீது திணித்து விடக்கூடாது. அவர்களின் கனவுகளுக்கு உயிர் கொடுங்கள் அவர்கள் உங்கள் கனவுகளை நிறைவேற்றுவார்கள். அதுவே எமது கனவு.

கடந்தகால நிலைமைகளைப் பார்க்கும்போது எமது பிரதேசங்களில் நல்ல தலைவர்கள் இல்லை. நல்ல தலைவர்கள் இருந்த காலங்கள் கடந்துவிட்டன.

நல்ல தலைவர்களுக்காக நாம் ஏங்கிக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் கல்வியினூடாக உங்கள் வீடுகளிலே நல்ல தலைவர்களை உருவாக்குகின்ற பெற்றோர்களாக நீங்கள் மாறவேண்டும் - என்றார். (த-110)



# சாதனை மாணவனுக்கு சைக்கிள் அன்பளிப்பு

வவுனியா,ஜன.9

தரம் ஒன்றில் இருந்து 5 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தினமும் பாடசாலைக்குச் சென்று 100 வீத வரவை அடைந்த மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

வவுனியா வேலங்குளம் கோவில்மோட்டையை சேர்ந்த ஜெயசங்கர் அட்சயன் என்ற 10 வயது மாணவனுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

இந்த மாணவன் தனது வீட்டில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரம்வரை நடந்துசென்று, மீண்டும் 7 கிலோமீற்றர் வரை பேருந்தில் பயணம் செய்து பாடசாலைக்கு சென்றுள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவனின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் வவுனியா நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் முயற்சியால் இந்த உதவி வழங்கப்பட்டது.

இதற்கான நிதியை இராமதாஸ் தனது பிள்ளைகளான றினோசன், றிஷா ஆகியோரின் 5 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வழங்கியிருந்தார். (ஐ-110)

### கரைச்சிப் பிரதேச சபைக்குரிய

# காணியை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

கிளிநொச்சி, ஜன. 9

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், கரைச்சியில் இராணுவத்தினர் கைப்பற்றி வைத்துள்ள பிரதேச சபைக்குரிய 3.5 ஏக்கர் நிலப்பர ப்பை விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன் என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் 23.02. 2018 அன்று நடைபெற்ற 2ஆவது சபை அமர்வில் கரைச்சிப் பிரதேச சபையின் பொது நூலகம் பற்றி விவாதம் நடைபெற்றது. அந்த 3.5 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் 14.05.2018 ஆம் திகதி 571ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரிக்கும் அந்தக் காலத்தில் ஆட்சியிலிருந்த வடக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் குறித்த நூலகக் காணி விடுவிப்புத் தொடர்பாகக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் சாதகமான பதில் இதுவரை கிடைக்க வில்லை.

இந்த 3.5 ஏக்கர் விஸ்திரணம் உள்ள கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் 1975ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் தபால் தொலைத்தொடர்பு அமைச்சராகவும் இருந்த செ.குமாரசூரியர் எண்கோண வடிவிலான பொது நூலமுகம் விளையாட்டு அரங்கத்துடன் கூடிய மைதானமும் நவீன சந்தைக் கட்டத்தொகுதியும் வடிவமைத்திருந்தார்.

அந்தக் காலத்தில் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அதைத்திறந்துவைத்திருந்தார்.

2009ம் ஆண்டு மீள்குடி யமர்வுக்குப்பின்னர் கரைச்சிப்பிரதேச சபைக்குரிய பொதுநூலக வளாகம் இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ளபடியால் இந்தக் காணியை விடுவித்து கிளிநொச்சிக்கான பொது நூலகத்தை அமைத்து மக்களின் பயன்பாட்டுக்குக் கையளிப்பதற்கு கரைச்சிப் பிரதேச சபை பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும், காணி விடு விக்கப்ப டாததால் அபிவிருத்தி முயற்சிகள் ஸ்தம்பித்துள்ளன.

நாட்டில் தற்போது புதிய அரசு பதிவ ஏற்றுள்ள நிலையில் கிளிநொச்சி மக்களின் மிக முக்கிய தேவையான பொதுநூலகத்தை அமைக்கஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தவிசாளர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று அவருடைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டுக்கும் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் எஸ். பாலச்சந்திரனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச்சந்திப்புகடந்தவியாழக்கிழமை முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது. சந்திப்பின் போது யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்டுவரும் கலாசார நிலையம் தொடர்பிலும் விசேடமாக கலந்துரையாடப்பட்டது என்று முதல்வரின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# சுதேச மருத்துவ நடமாடும் சேவை

முல்லைத்தீவு,ஜன.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சுதேச மருத்துவ நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளரும் மாவட்ட சித்த மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகருமாகிய சு.மணிவர்ணனிடம், விசுவமடு மக்கள் வைத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது.

விசுவமடு நகரை அண்மித்த பொது நூலக மண்டபத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் காலை 8மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1 மணி வரையும் நடமாடும் சேவை நடைபெறும்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில், மருத்துவர் செ.தர்சினி நோயாளர்களைப் பார்வையிட்டார்.

இதில் 75க்கு மேற்பட்டவர்கள் பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-213)

# சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாணம் செரண்டிப் நிறுவனத்தின் அனுசரணையில் புதுவருட தினத்தில் தெல்லிப்பழை ஆதார் மருத்துவமனையில் புற்றுநோய் விடுதி மருத்துவ அதிகாரி கவிதா இந்திரநாத் தலைமையில் சிறுவர்தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது சிறார்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன. (ஐ)



# வெளிநாட்டு ஆசையால் கொல்லப்பட்ட இளைஞன்

கொழும்பு, ஜன. 9


யாழ்ப்பாணத்திலிருந்து ஐரோப்பிய நாட்டுக்குச் சென்ற இளைஞன் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டான் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

நெல்லியடி வதிரியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்ட நிலையில், கிறிஸ் லாந்து நாட்டு காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி ஐரோப்பிய நாடு ஒன்றுக்குள் நுழையும் நோக்கில் கிறீஸ் நாட்டை அண் மித்த வேளையில் அவர் கொல் லப்பட்டிருக்கலாம் என்று சந்தே கம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய எல்லை நாடான கிறீஸ் நாட்டுக்குள் நுழைய நீண்ட தூரம் கடும் குளிரில் நடைப் பயணமாக ஆறு, மலை, காடுகள் கடந்து செல்ல வேண் டும் என்று தெரிவிக்கப்படுகிறது. முகவர் ஊடாக வெளிநாடு சென்ற இளைஞன் ஒருவரே இவ் வாறு கொலை செய்யப்பட் டுள்ளார்.

இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத் திலிருந்து ஐரோப்பா சென்ற இளைஞர் ஒருவர் பனாமா காட்டி லிருந்து சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



## நல்லிணக்கச் செயற்பாடு கிளிநொச்சியில் நடந்தது

கிளிநொச்சி, ஜன. 9

இன நல்லிணக்கச் செயற்பாடு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடை பெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெற்கையும் வடக்கை யும் இணைத்து இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சந்திப்பு இடம்பெற்றது என்று தெரிவிக் கப்பட்டது.

முதற்கட்டமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங் களைச் சேர்ந்த 24 அங்கத்தவர்கள் பூநகரிக்கு அழைத்துவரப்பட்டனர். இங்குள்ள மக்களின் அடிப் படை மற்றும் சமூக அரசியல் ரீதியான பிரச்சினை களைச் சகோதர இனத்தவர்களுக்கு அறியவைக் கும் வகையிலும், அங்குள்ள மக்கள் எதிர்கொள் ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை இங்குள்ள மக்கள் அறிந்துகொண்டு தமக்குள்ளே புரிந்து ணர்வை ஏற்படுத்தும் வகையிலும் குறித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிக்கு வருகை தந்த காலி மற்றும் மாத்தறை மாவட்ட மக்களை பூநகரி மக்கள் கைலாகு கொடுத்து வரவேற்றனர். இந்த நிகழ்வு பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் இடம்பெற்றது. தொடர்ந்து இரு தரப்பினரும் தத்தமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாள்களைக்கொண்ட குறித்த நல்லிணக் கத் திட்டம் நேற்று நிறைவடைந்தது. சகோதர இனத் தவர்களை பூநகரி மக்கள் தத்தமது வீடுகளில் தங் கவைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர். இவ்வாறு இளைஞர் சேவை மன் றத்தால் இளைஞர்களுக்கிடையில் இவ்வாறான வேலைத்திட்டம் வருடாந்தம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-6.222)

## இனநிலைவரம் பற்றிய மீள்வாசிப்பு அவசியம்

*மாகாண முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு*

*கிளிநொச்சி, ஜன. 9*

எமது இளையவர்கள் வாசிப் புப் பழக்கத்தைக் கைவிட்ட தன் விளைவுகளை இன்று எமது சமூகம் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஒரு சமூகத் தின் இருப்புக்கு, அதன் அறி வுப்பாரம்பரியத்துக்கு வாசிப்பு எந்தளவுக்கு முக்கியமோ அந் தளவுக்கு எமது இனத்தின் நிலைவரம் குறித்தும் மீள் வாசிப்பு அவசியமாகிறது.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் த.குரு குலராசா தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை பொது வாசிப்பு மாத நிகழ்வு நேற்றுமுன்தி னம் நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தா வது:

கருத்தூன்றிய வாசிப்புமுறை உரத்து வாசிக்கின்ற பழக்கம் என்பவை எங்களிடம் இருந் தது. நல்ல நூல்களை நாடிக் கற்கவும் புதியவற்றைத் தேடிப் படிக்கவும் எங்களுடைய மூத் தவர்கள் எங்களுக்கு வழிகாட் டினார்கள். தெருவிளக்கில் கற் றுத் தேர்ச்சி அடைந்து ஆட்சி செய்த ஆபிரகாம் லிங்கன் போல பலரை வாசிப்புப் பழக் கம் உயர்த்தி இருக்கிறது. மேல் புல் மேய்கின்ற நிலைவ ரமே இன்றைய பிள்ளைகளி டம் உள்ளது. ஆகவே நாங் கள் மீளவும் நூலகங்களில் நூல்களை வாசிக்கவேண் டும். வீடுகளில் நூலகங்களை உருவாக்கவேண்டும். மீள்வா சிப்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். தனித்து வாசித் தல் என்பது கற்றலோடு மட்டு மானதல்ல. இளைய சமூகத் தின் பழக்கவழக்கங்கள், பண் பாட்டுக்கோலங்கள், சிந்தனை கள், செயற்பாடுகள் மட்டு மன்றி, எங்களுடைய அர சியல் பயணங்களிலும் எமது சமூகத்தைச் சக்தி மிக்கதாக்கு கின்றது- என்றார். (து-6)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம், ஜன. 9*

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் சமகால சர்வதேச அரசியல் போக்கு என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கி ழமை பிற்பகல் 4 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முரு கையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

சமூக செயற்பாட்டாளர் இ.ஸ்ரீகரன் லைமையில் இடம்பெறவுள்ள கலந்து ரையாடலில் கருத்துரைகளை "மத்திய கிழக்கில் உருவாகியுள்ள புதிய பதற் மும் அதன் உலகளாவிய தாக்கமும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்க ழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், "இந்திய குடியுரிமைச் சட்டத் திருத்தமும் தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்பும்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் க. வேல்தஞ்சன் ஆகியோ ரும் ஆற்றவுள்ளனர். (க)

## இல்ல விளையாட்டுப் பயிற்சிகள் ஆரம்பம்

*சாவகச்சேரி, ஜன. 9*

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வருட இல்ல விளையாட்டுப் போட்டி களுக்காக மாணவர்களுக்கி டையே பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வருடத்துக்கான விளை யாட்டுப் போட்டிகளை இந்த மாதம் 31ஆம்திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்குமாறு வலயத் தால் அறிவிக்கப்பட்டது. இத னால் போட்டிகளை நடத்துவ தற்கான ஏற்பாடுகள் பாடசா லைகளின் நிர்வாகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

இதேவேளை மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் மருத்துவ அறிக்கை பெறுவதற்கு மருத் துவமனையில் பரிசோதனை களை மேற்கொண்டு வருகின் றனர்.

இது தொடர்பாக வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரனு டன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "மாணவர்களின் கல்வி. நிலையைக் கருத்தில். கொண்டு ஒரு மாதகால அவ காசம் வழங்கப்பட்டுள்ளது. இக் காலப்பகுதிக்குள் விளை யாட்டுப் போட்டிகளை நடத்தி தொடர்ந்து கல்வி நடவடிக் கைளை மேற்கொள்ளுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பெப்ரவரி மாதத்தில் வலயப் பாட சாலைகள் எவற்றுக்கும் விளை யாட்டுப்போட்டிகளை நடத்த அனு மதி. வழங்கப்படமாட்டாது" எனத் தெரிவித்தார். (ஐ-9)

## கூட்டுறவுதினவிழாவும் சங்க ஒன்றுகூடலும்

*சாவகச்சேரி, ஜன. 9*

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட் டுறவு தின விழாவும், சங்க ஊழியர் நலன்புரி சங்கத் தின் ஒன்றுகூடலும் சங்க கூட்டுறவு மண்டபத்தில் அண்மையில் நடைபெற் றன.



சங்கத் தலைவர் செ. மகேஸ்வரன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவி ருத்திஆணையாளர்பொ.வாகீ சன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட உதவிக் கூட்டுறவுஅபிவிருத்திஆணை யாளர் திருமதி சியாமளா சண் முகலிங்கம், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவ மங்கை இராமநாதன், யாழ்ப் பாண மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் திருமதி வேதவல்லிசெல்வரத்தினம்ஆகி யோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சங்கத்தில் நீண்ட காலமாக அங்கத்தவராக உள்ள 8 முதியோர்கள் பொன் னாடைபோர்த்திபரிசில்வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

கடந்த 2018, 2019 ஆண்டுக ளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரிசில் பரீட்சையில் சித் திபெற்றசங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

## திருவாதிரை உற்சவம்

*யாழ்ப்பாணம், ஜன. 9*

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை திருவாதிரை உற்சவம் இடம்பெறும்.

நாளை காலை 5 மணிக்கு சிறப்புப் பூசைகள் ஆரம்ப மாகி ஆருத்திரா தரிசனம், நடேசர் அபிஷேகம் இடம் பெற்று திருவாதிரை உற்ச வம் இடம் பெறும். (க-17)

## இசையரங்கு

*யாழ்ப்பாணம், ஜன. 9*

காரைநகர் ஈழத்து சிதம்பர மார்கழி மாத உற்சவ பஞ்சரத பவனிஇன்றுவியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

அத்தருணத்தில் ஆலய வடக்கு வீதியில் அமைந் துள்ள சிவனடியார் மடால யத்தில் கலாபூசணம் க.லோகேஸ்வரனின் இசை யரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (ஐ-50)

# பிரபாகரனால் தமிழக சட்டமன்றத்தில் 'சூடு'

**சென்னை, ஜன. 9**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வழிதவறிச் சென்றதால்தான் அவர் மீதான அ.தி.மு.க.வின் அனுதாபம் குறைந்ததாக அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் செம்மலை தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இடையே தமிழக சட்டமன்றத்தில் காரசார விவாதம் நடைபெற்றது.

சட்டமன்றத்தில் ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது பேசிய அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் செம்மலை, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் தாயார் சிகிச்சைக்காக விமானத்தில் சென்னை வந்தபோது, அவரை அப்போதைய தி.மு.க. தலைமையிலான அரசு தடுத்து நிறுத்தியது என்றும் ஆனால் தற்போது இலங்கை தமிழர்கள் குடியுரிமைக்காக தி.மு.க. போராடுகிறது எனவும் விமர்சித்தார். இலங்கை தமிழர் விவகாரத்தில் தி.மு.க. இரட்டை நிலைப்பாடு கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன், பிரபாகரன் ஒரு தீவிரவாதி என மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா விமர்சித்தது ஏன் என கேள்வி எழுப்பினார்.

துரைமுருகனுக்கு பதில் அளித்த செம்மலை, பிரபாகரன் நல்ல வழியில் சென்றபோது, அவரை எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் ஆதரித்தார்கள் என்றும், ஆனால் அவர் வழிதவறியபோது அ.தி.மு.க.வுக்கு அவர் மீதான அனுதாபம் குறைந்தது எனவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்துப் பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் இலங்கை தமிழர்கள் பாதிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்து பேசிய முதலமைச்சர் பழனிசாமி, மத்தியில் 12 ஆண்டுகள் அங்கம் வகித்த தி.மு.க. இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை பெற்றுத் தராமல் எங்கே போனது என கேள்வி எழுப்பினார். இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை கிடைக்கும் வரை, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழக மக்களுக்கு வழங்கப்படும் பொங்கல் சிறப்புத் தொகுப்பு உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் இலங்கை தமிழர்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இதன்போது குறிப்பிட்டார். (ஒ.5)

# சஜித்தின் வாய்தான் தோல்விக்கு காரணம்


## *மஹிந்தானந்தவின் கண்டுபிடிப்பு*

சஜித் பிரேமதாசவின் அளவுக்கு அதிகமான பேச்சுத்தான் அவரது தோல்விக்குக் காரணம். அவர் நாடாளுமன்றத்திலும் அதிகமாக பேச வேண்டும். அப்படியென்றால்தான் நாம் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகளை பெறலாம் என தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடன உரை மீதான இரு நாள்கள் விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகியது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாசவின் அதிகளவிலான பேச்சே ஜனாதிபதி தேர்தலில் அவரின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. எனவே இன்னும் அதிகமாக நீங்கள் பேசுங்கள். அப்போது தான் எமக்கு வாக்கு அதிகரிக்கும். இன்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் இடையில் எதிர்க்கட்சி தலைவர் மோதல் வந்துள்ளது. சுமந்திரன் எதிர்க்கட்சி தலைவரா? அனுரகுமார எதிர்க்கட்சி தலைவரா? ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவரா? அல்லது சஜித் பிரேமதாச எதிர்க்கட்சி தலைவரா என்பது குறித்து முதலில் உங்க



ளுக்குள் ஒரு கலந்துரையாடலை நடத்தி ஒருவரை நியமியுங்கள்.

எம்.சி.சி குறித்து, சிங்கப்பூர் உடன்படிக்கை குறித்து, விலை உயர்வு குறித்து எல்லாம் பேசும் எதிர்க்கட்சி தலைவர் அன்று ஆட்சியில் இருக்கும் போது ஏன் வாய் திறக்கவில்லை. சிங்கப்பூர் உடன்படிக்கை, எம்.சி.சி உடன்படிக்கை அமைச்சரவைக்கு கொண்டுவந்த நேரம் நீங்கள் அமைச்சரவையில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்று அப்போதைய ஜனாதிபதி கூறினார்.

இராணுவத் தண்டிப்பு குறித்து நடவடிக்கை எடுத்தபோது ஏன் வாய் திறக்கவில்லை. அப்போதெல்லாம் வாய் திறக்காது இன்று நீங்கள் நியாயம் பேச வந்துள்ளீர்கள். உங்களின் ஆட்சிக் காலத்தில் செய்த எதனையும் நாம் செய்ய மாட்டோம். கடந்த ஆட்சியில் நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுத்தது, அதிகாரிகளை மிரட்டி அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபட்ட குரல் பதிவுகளில் 5 குரல் பதிவுகள் மட்டுமே வெளியில் வந்துள்ளன. இன்னும் 1 இலட்சத்து 21 ஆயிரம் குரல்பதிவுகள் என்னிடம் உள்ளன. அதனை வெளியிட்டால் நல்லாட்சி அரசின் சகல குற்றங்களும் வெளியில் வரும். எமது ஆட்சியாளர்களை விமர்சித்து நீதிமன்ற அவமதிப்பு, சட்ட மீறல்கள் முன்னெடுத்த தாக மக்கள் மத்தியில் கூறியவர்களின் உண்மை முகம் இப்போது வெளியில் வந்துள்ளது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவும் சேர்ந்து செய்த சதிகள் வெளியில்வந்துள்ளன. இதுகுறித்துசட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் பாலித ரங்கே பண்டார, குற்றப் புலனாய்வு பிரிவிடம் இருந்த குரல் பதிவுகள் எவ்வாறு உங்களின் கைகளுக்கு வந்தன? நீங்கள் இவற்றை எவ்வாறு எடுத்தீர்கள்?. அப்படியென்றால் இது சட்டத்தை கையில் எடுத்த செயற்பாடு இல்லையா? என்று கேள்வி எழுப்பினார். இந்த கேள்விக்கு மஹிந்தானந்த பதிலளிக்க முடியாமல், எதுவும் பேசாமல் உரையை முடித்துக் கொண்டு உட்கார்ந்தார். (ஒ.5)



கோப்புப்படம்

# யானை தாக்கி விவசாயி சாவு

மட்டக்களப்பு.ஜன.9

யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலர் பிரிவில் புலிபாய்ந்தகல் மீயான்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சந்திவெளி திகிளிவெட்டைப் பிரதேசத்தை சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் ரவிச்சந்திரன் (வயது - 43) என்பவரே உயிர் இழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வயலில் இரவு காவலுக்காகச் சென்ற வேளை யானை தாக்கியது என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# துமிந்தவின் வழக்கை மீண்டும் விசாரிக்குக!



கொழும்பு. ஜன. 9

துமிந்த சில்வாவின் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கும் இடையிலான உரையாடலில் தூக்குத் தண்டனை கைதியான துமிந்த சில்வாவை சிறைக்கு அனுப்புவதே நால்வரது எதிர்பார்ப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் அதிகாரம் முழுமையாக இவரது விடயத்தில் வைராக்கியத்துடன் செயற்படுத்தப்பட்டுள்ளன. பாரத லக்ஷ்மன் கொலை விவகாரத்தில் பொலிஸ், குற்றப்புலனாய்வு பிரிவினர் சேகரித்த சாட்சியங்கள் மற்றும் விசாரணைகளை மேற்கொண்ட விதம் தொடர்பாக தற்போது சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. இவ்விடயம் தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தூக்குத் தண்டனை கைதியான துமிந்த சில்வாவின் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தை அவமதித்த நீதிபதிகளும் முறையான விசாரணைகளுக்கு உட்படுத்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நிறுவ வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுகின்றோம், - என்றார். (ஒ.5)

# தொலைபேசி உரையாடல் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 9
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல் குரல் பதிவுகள் குறித்து விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாகக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டில் கடந்த சனிக்கிழமை சோதனை நடத்தப்பட்டிருந்தது. அவரது வீட்டிலிருந்து இறுவட்டுக்கள் சில மீட்கப்பட்டிருந்தன. ரஞ்சன் ராமநாயக்க பல்வேறு தரப்பினருடனும் உரையாடிய அலைபேசி அழைப்புக்கள் அதில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதுதொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ.5)

# துமிந்தவை விடுவிக்கவே துடிக்கிறார்கள்!!!

## ஹிருணிகா கொதிப்பு




கொழும்பு, ஜன. 9
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சில குரல் பதிவுகள் வெளியாகியிருப்பதுடன், அந்தக் குரல் பதிவுகளின் மூலம் எனது தேவைக்காகவோ அல்லது ரஞ்சன் ராமநாயக்கவின் தேவைக்காகவோதான் துமிந்த சில்வாவுக்குத் தண்டனை வழங்கப்பட்டது போன்றும், உண்மையில் அவர் மிகவும் அப்பாவி போன்றதுமான தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவையனைத்தும் துமிந்த சில்வாக்கு பொதுமன்னிப்பை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றனவா என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர சந்தேகம் வெளியிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சில குரல் பதிவுகள் வெளியாகி, அவை தற்போது பேசுபொருளாகியுள்ளன.
எனது தந்தையாரின் கொலையாளியான துமிந்த சில்வா உள்ளிட்ட மூவருக்கு ஏற்கனவே சாவுத் தண்டனை வழங்கப்பட்டு, அது உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுவிட்டது. அவ்வாறிருக்க தற்போது வெளியான குரல் பதிவுகளின் தொடர்ச்சியாகதுமிந்தசில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படுவது குறித்தும் பேசப்பட்டு வருகிறது.
உண்மையில் எனது தந்தையான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு, சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வா உள்ளிட்ட மூவர் மீதும் அச்சுறுத்துதல், கொலைக்கான முயற்சி, கொலை உள்ளடங்கலாக 17 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.
அதேபோன்று மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன போன்றவர்கள் கடந்த காலத்தில் துமிந்த சில்வாவை போதைப்பெருள் விற்பனைக்காரன் என்று மிகமோசமாக விமர்சித்திருந்தமையதுடன் மாத்திரமல்லாமல், கொழும்பில் மஹிந்த ராஜபக் ஷ வின் நீலக்கொடியை ஏற்றுவதற்கு எனது தந்தை மாத்திரமே இருந்தார் என்றும் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் தற்போது அவர்களே துமிந்த சில்வா நல்லவர் என்றும், எனது கோரிக்கைகளுக்கு அமைவாகவே அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார் எனவும் கூறுகின்றமை வேடிக்கையாக இருக்கிறது -என்றார்.
(ஒ.5)

# ஆஸ்திரேலியாவுக்கு தேயிலை அன்பளிப்பு

## காட்டுத்தீ இடருக்கு இலங்கையின் நிவாரணம்

கொழும்பு, ஜன. 9
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆஸ்திரேலியா பிரதமர் ஸ்கொட் மொரிசனை நேற்றுமுன்தினம் தொலைபேசியில் அழைத்து ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ குறித்து அனுதாபம் தெரிவித்துள்ளார்.
2004ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி, அடிக்கடி ஏற்பட்ட இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் தற்போது ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள இடரால் அங்குள்ள மக்களின் வேதனைகளை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.
இடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இலங்கை ஒரு தொகை தேயிலையை அன்பளிப்பு செய்வதாகவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, ஆஸ்திரேலியா பிரதமர் ஸ்கொட் மொரிசனிடம் தெரிவித்துள்ளார். (ஒ.5)



# திடீரெனப் புகுந்த பாம்பால் பதறிய பணியாளர்கள்

கல்முனை, ஜன. 9
அம்பாறை கல்முனையிலுள்ள அரச அலுவலகத்தின் பின்புறமாக மலைப்பாம்பு போன்ற தோற்றம் கொண்ட பாம்பு திடீரென உட்புகுந்துள்ளது. நேற்று முன்தினம் மதியம் உட்புகுந்த சுமார் 7 அடி கொண்ட பாம்பால் அங்கு பணியாற்றிய பணியாளர்கள் பதற்றமடைந்தனர். பின்னர் பாதுகாப்பு கருதி பாம்பு அடித்துக் கொல்லப்பட்டது. (ஒ.5)

# மண் அகழ்வில் அநீதி; காகிதநகரில் போராட்டம்


மண் அகழ்வதில் அநீதி இடம்பெறுவதாகத் தெரிவித்து ஓட்டமாவடி காகிதநகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தால் மண் அகழ்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் கிரான் பிரதேச செயலக பிரிவில் குறிப்பிட்ட சிலர் மண் ஏற்றுகின்றனர். வரையறுக்கப்பட்ட ஐக்கிய உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தினருக்கு பிரதேச செயலகத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
மண் அகழ்வுக்குத் தடைவிதித்தால் அனைவருக்கும் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். சிலருக்குச் சாதகமாகவும், சிலருக்குப் பாதகமாகவும் இருக்கக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.
தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஜய பெரமுனவிடம், சங்கத்தின் நிர்வாகத்தினர் கையளித்தனர். அதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (க)





# ஷானிக்கு தடை!

கொழும்பு, ஜன. 9
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்த உத்தரவை நேற்றுப் புதன்கிழமை நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.
ஆட்சிமாற்றம் ஏற்பட்டதும், ஷானி அபேசேகரவே முதலாவதாக இடமாற்றப்பட்டிருந்தார். அவர் முன்னைய ஆட்சியில்பல்வேறு முக்கிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். இது தொடர்பில் அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ரஞ்சன் ராமநாயக்கவுடன் உரையாடினார் எனக் கூறப்படும் ஒலிப்பதிவுகள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இதனையடுத்து அவர் இடைநிறுத்தப்பட்டிருந்தார். (ஒ.5)



# பண்ணைக் கூல்பாரில் விசமிகள் அடாவடி

## ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைச் சந்தியில் அமைந்துள்ள கூல்பார் ஒன்றில் விசமிகள் நேற்று அடாவடியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு பணிபுரிந்த ஓர் ஊழியர் காயமடைந்து யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த ஊழியரைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் அவர்கள் தாக்கியுள்ளனரா என்று சந்தேகிக்கின்றோம் என்றும் தாக்குதலாளிகளை அடையாளம் காட்டுபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றும் கூல்பார் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்தப் பூங்காவில் பகலிலும் மாலையிலும் இரவிலும் மது அருந்துகின்றனர். அவர்களில் சிலர் தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சில மாதங்களுக்கு முன்னர் எழுத்துமூலம் அறியப்படுத்தியிருந்தோம். எதுவும் நடக்கவில்லை என்று கூல்பார் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இரவு 10 மணியளவில் காரில் வந்த அறுவர் அடங்கிய காடையர் குழு பூங்காவுக்கு முன்பாக காரை நிறுத்திவிட்டு அங்கிருந்து மது அருந்திவிட்டு 12.40 மணியளவில் பூட்டியிருந்த கடைக்குள் இருவர் வந்து தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு களவெடுக்கும் நோக்கில் கூல்பார் ஊழியரைத் தாக்கியுள்ளனர். இவர்கள் தாக்குவதைப் பூங்காவில் இருந்து அவதானித்த இவர்களுடன் வந்த ஏனைய நால்வரும் ஓடிவந்து கதறக் கதற அந்த ஊழியரைத் தாக்கியுள்ளனர். அவர் காயத்துடன் அருகிலுள்ள விஷேட அதிரடிப் படையினர் முகாம் முன்பாக வீழ்ந்து கிடக்கின்றமையும் சிசிரிவியில் பதிவாகியுள்ளது என்று சி.சி.ரி.வி. கமெரா பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணை நடத்தினர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அருகிலிருந்த விசேட அதிரடிப்படையினர் விடய மறிந்து ரோச்லைட் அடித்து பார்த்துவிட்டு கண்டும் காணாமல் இருந்துள்ளனர் என்றும் நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டினர். (த)

### மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

யாழ் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி ஒருங்கிணைப்புச் சபையில் சந்திப்பு இடம்பெற்றது.

காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை சந்திப்பு இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-20)


## தேவை

I. நல்லூர் குறுக்குத்தெருவில் அமைந்திருக்கும் ஆர்.வி.ஜி கம்பனிக்கு **விற்பனையாளர்** தேவை. வயதெல்லை 30 - 35 இற்கு இடைப்பட்ட ஆண்களாகவும் க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் பாடத்தில் சித்தி அடைந்தவராகவும் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

II. நீர்வேலி கரந்தன் பகுதியில் உள்ள விவசாயப் பண்ணைக்கு அனுபவம்மிக்க **தோட்ட பராமரிப்பாளர்** தேவை. குடும்பமாக தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

✲ சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

(CS 30483) (14.17)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :

**RVG Company**
**58, Nallur Cross Road, Jaffna.**


## கண்ணீர் அஞ்சலி




எமது சங்க உறுப்பினர்
**செ.ஜெயபாலன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**கந்தையா செல்வரத்தினம்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(N 12240) (14.17)

## மரண அறிவித்தல்



# கனகலிங்கம் சிவனேசலிங்கம்

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சிவனேசலிங்கம் கடந்த (04.01.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கனகலிங்கம் - தவமணிரூபி தம்பதியரின் அன்பு மகனும், தனநாயகம் - சிவகொழுந்து தம்பதியரின் மருமகனும், வனித்தாவின் அன்புக் கணவரும், ஆதவன், மதுரா, அங்கதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரூபி, ரூபலிங்கம், சாந்தலிங்கம், சிறிகாந்தலிங்கம், ஆனந்தரூபி ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரன், கண்ணதாசன், கோமதி, நாகலோகினி, கமலராணி, கரன், தயாபரன், ரமணி ஆகியோரின் மைத்துனரும், நிஷாகரன், வைஷ்னவன், கஸ்தூரி, லக்ஸ்மி ஆகியோரின் ஆசை மாமாவும், தனுயா, ஜனகன், விதுஷ்தரன், விஷ்வாகரன், துஷாகரன் ஆகியோரின ஆசை சித்தப்பாவும், ஓவியா, நீலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2020) வியாழக்கிழமை சுவிஸ் நாட்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**0041 4149 04664 (சுவிஸ்)**
**077 310 4510 (சாந்தன் - சகோதரன் - இலங்கை )**


தகவல்:
**குடும்பத்தினர்**

(cs 30485) (13.17)

## மரண அறிவித்தல்

# கந்தையா சுப்பிரமணியம்

(தீயணைப்பு படை ஓய்வூதியர்)



பிறப்பு 11.12.1935
இறப்பு 07.01.2020

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 07.01.2020 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காஞ்சென்றவர்களான கந்தையா - அன்னலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மகாதேவா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், இராசதுரை, சீவரத்தினம், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், துஷானி, தர்சினி (இத்தாலி), ஹரிஹரன் (யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்), ஜெயசுதன் (பிரான்ஸ்), சிறிதரன் (இத்தாலி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரமூர்த்தி (சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர், மருத்துவ பீடம் யாழ். பல்கலைக் கழகம்), காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பிரமிளா (ஆசிரியர்- உரும்பிராய் செல்லப்பா முன்பள்ளி), நடேசனி (பிரான்ஸ்), சுமித்திரா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும், யதுசாமினி, தயாளினி, பர்மினி, யதுர்சன், அக் ஷயா, திலக் ஷனா, அஜந்தன், நிலோஷனா, ஆருஷா, அக் ஷயன், அபிசன், மோசிகன், மிதுர்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2020) வியாழக்கிழமை அவரது உரும்பிராய் தெற்கு இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மானயத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்பாலன் வீதி,**
**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**076 976 1979, 077 426 3133**

(cs 30482) (13.17)

# ஆயரைச் சந்தித்தார் ஆளுநர் சாள்ஸ்



*யாழ்ப்பாணம், ஜன.9*

**வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ். ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

புதிய ஆளுநராக கடந்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்ற ஆளுநர், தனது பணிகளை ஆரம்பிப்பதற்காக, ஆயரிடம் ஆசி பெற்றுக் கொள்வதற்காக சந்திப்பை மேற்கொண்டார். இதன் போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஆயருடன் அவர் ஆலோசித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்னிலையில், பி.எஸ்.எம். சாள்ஸ் அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் கடந்த 2 ஆம் திகதி தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார். (க-21,51)



# மார்கழி இசை விழா

*வவுனியா, ஜன.9*

வவுனியா பிரதேச கலாசார பேரவையும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து நடத்திய மார்கழி இசை விழா நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கலாபூசணம் திருமதி தேவிமனோகரி கனகேஸ்வரன் நினைவாக நடத்தப்பட்ட இவ் விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் கனகேஸ்வரி கந்தையா கலந்து கொண்டார்.

தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையை கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும், நினைவுரையை சூரியஜாழினி வீரசிங்கமும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து ஆரம்பமான இசை நிகழ்வில் பாட்டு எஸ்.பிரதீபன், கிரிஜா சிவனேசமூர்த்தி, யோசெப் மனோகரன், பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் அ.ஜெயராமனும், மிருதங்கம் ம.லோகேந்திரனும் பங்கெடுத்தனர்.

நிகழ்வில் கலைமாமணி இ. சிவசோதி, திருமதி வேல்விழி சூரியகுமார் மற்றும் திருமதி சிவசோதி தங்கரட்ணம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்

மேலும் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன், வவுனியா நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, கலாசார உத்தியோகத்தர்களான ந. மாலினி, வீ.பிரதீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-110)

## டெங்கு ஒழிப்பு குழுக்களை துரிதப்படுத்த நடவடிக்கை

*மூளாய், ஜன.9*

வலிகாமம் மேற்கில் உள்ள கிராமிய மட்ட டெங்குக் கட்டுப்பாட்டு குழுக்களைப் பலப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் டெங்குக் கட்டுப்பாட்டு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் மந்தகதியில் உள்ளன. அதனையடுத்து வலி.மேற்குப் பிரதேச செயலர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அலுவலர்களுக்குப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன. தற்போது அனைத்துக் கிராமங்களிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் காணப்படும் அநேகமான இடங்களைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-121)

# வசதியற்ற மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி

## இலவசமாக வழங்குகிறது ப.நோ.கூ.ச. இயக்குநர் சபை

*சாவகச்சேரி ஜன.9*

தென்மராட்சி கல்வி வலயத்தில் பார்வைக்குறைபாட்டுடன் கல்வியிலும் பொருளாதார நிலையில் பின் தங்கிய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையினர் இதனை வழங்க முடிவு செய்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில், பொருளாதார நிலையில் பின்தங்கி 4 ஆயிரம் ரூபா பெறுமதியான மூக்குக்கண்ணாடி வாங்க முடியாத நிலையில் மாணவர்கள் பலர் தமது கல்வியைத் தொடர்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே அவ்வாறு வசதியற்ற மாணவர்களும் சிறந்த முறையில் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தென்மராட்சி கிழக்கு (கொடிகாம்ம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உதவ முன்வந்துள்ளது.

சங்கத்தின் இயக்குநர்கள், சங்கத்தின் கல்வி நிதியை இதற்கென ஒதுக்கினர். பின்தங்கிய மாணவர்களின் விவரங்களை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியிடம் சேகரித்தனர். அதனடிப்படையில் மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கவேண்டுமென முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தால், கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஒதுக்கப்படும் கல்வி நிதியில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த.உயர்தர வகுப்பில் கற்கும் 20 மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி அபிவிருத்தி நிதி வழங்கப்படுகின்றது. (ஐ-9)



## ‘ஸ்மார்ட் ஸ்ரீலங்கா’ திட்டம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், ஜன.9

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் இளையோரை நவீன யுகத்தினுல் உள்ளீர்கும் முகமாக உருவாக்கப்பட்ட “ஸ்மார்ட் ஸ்ரீலங்கா” நிகழ்ச்சித்திட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் முற்பகல் 10 மணிக்கு அதன் மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.மஜித் தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பூலோகராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் பிரதி நிதிகளான ஜசோதரன், ஜோசப் நயன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-56)



## 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி

*கிளிநொச்சி, ஜன.9*

கிளிநொச்சி சிவபுரம் பகுதியைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

பிரித்தானியாவைத் தளமாக்கொண்டு இயங்கும் மிட்லாண்ட் நுண்கலை மன்றத்தின் அனுசரணையுடன் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர், உப தவிசாளர், பரந்தன் வர்த்தக சங்கத் தலைவர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-6)



## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*வவுனியா, ஜன.9*

பாவற்குளம் அவரன்துலவா பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் 25 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வெளிச்சம் அறக்கட்டளை ஊடாக தவலோசனால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கிராம சேவையாளர் திருமதி. அனோமா, அபிவிருத்தி உத்தியோகத்தர் வீ.ஸ்ரீதரன், வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், மகளிர் அமைப்பின் தலைவி திருமதி றீட்டா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-110)

# மந்துவிலில் அடிபிடி மூன்று பேர் கைது

## காரைவிட்டு ஓடியது கும்பல்

**சாவகச்சேரி, ஜன. 9**
**காரில் சென்ற குழுவினர் வீட்டிலிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர். பொலிஸார் வருவதைக் கண்டதும் அவர்கள் காரை விட்டுத் தப்பிச் சென்றனர். அதன்போது ஒருவர் பிடிபட்டார். பின்னர் வாகனத்தை எடுத்துச் செல்லவந்தார்கள் என்று கூறி இருவரை அங்குள்ள பொதுமக்கள் பிடித்துத் தாக்கியுள்ளனர். அதனால் அந்த இருவரும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

சாவகச்சேரி, ஜன. 9
காரில் சென்ற குழுவினர் வீட்டிலிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர். பொலிஸார் வருவதைக் கண்டதும் அவர்கள் காரை விட்டுத் தப்பிச் சென்றனர். அதன்போது ஒருவர் பிடிபட்டார். பின்னர் வாகனத்தை எடுத்துச் செல்லவந்தார்கள் என்று கூறி இருவரை அங்குள்ள பொதுமக்கள் பிடித்துத் தாக்கியுள்ளனர். அதனால் அந்த இருவரும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் மந்துவில் காரைக்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதிக்கு இரவு வாகனத்தில் சிலர் வந்துள்ளனர். வீடு ஒன்றின் வேலியைத் தீயிட்டு எரித்துள்ளனர். பின்னர் அங்கிருந்த மூதாட்டியையும் மற்றொரு பெண்ணையும் தாக்கியுள்ளனர். இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்குவந்ததும் தாக்குதல் நடத்தியவர்கள் வாகனத்தைக் கைவிட்டு ஓடினர். அதன்போது ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர். தாக்குதலில் காயமடைந்த மூன்று பெண்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சிறிது நேரத்தில் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு இருவர் வந்துள்ளனர். அவர்கள் முதலில் வந்து தாக்குதல் நடத்திய குழுவினரே என்று குற்றஞ்சாட்டிய அந்தப் பகுதி மக்கள் அந்த இருவரையும் கடுமையாகத் தாக்கினர். பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். எனினும், தாங்கள் தாக்குதல் நடத்தவரவில்லை. தலைக்கவசம் வாங்கிச் செல்லவே வந்திருந்தோம் என்று அந்த இருவரும் கூறுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் அவர்கள் காயமடைந்துள்ளனர் என்பதனாலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதனாலும் பொலிஸாரின் பாதுகாப்புடன் அந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் பகுதியில் ஒருவர் வீடு ஒன்றை விற்றுள்ளார். அதை வாங்கிய குடும்பத்தினர் அந்த வீட்டில் தங்கியிருந்த பிறிதொரு குடும்பத்தை வெளியேறுமாறு கூறியிருந்தனர் என்றும் அவர்கள் வெளியேறாது காலத்தை இழுத்தடித்து வந்தனர் என்றும் இந்த நிலையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றுகூறும் பொலிஸார், மேலதிக விசாரணைகளின் பின்னரே முழு விவரங்களையும் கூறமுடியும் என்றும்

## அந்த நால்வரையும் விடுவிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திர னைக் கொலைசெய்ய முயன்றார் கள் என்ற குற்றச்சாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுதலை செய்யுமாறு அந்தக் கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு சுமந்திரனைக் கொலைசெய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் 5பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. அவர்கள் 2017 ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டு2018ஆம்ஆண்டுவிசாரணை எனக் கூறி அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு இன்றுவரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார். வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய நால்வரையும் விடுதலைசெய்ய் நடவடிக்கை எடுக்குமாறு அந்த இளைஞர்களின் குடும்பத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு)

## கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.

# பரராஜசிங்கம் படுகொலை வழக்கு 22க்கு ஒத்திவைப்பு

செங்கலடி, ஜன. 9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கு விசாரணை ஜனவரி மாதம் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜோசப்பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு ஆராதனையில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.வை.எம். இஸ்ஸடீன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே ஒத்திவைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா மற்றும் கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு அலுவலர் மீரா லெப்பை கலீல், முன்னாள் இராணுவ சிப்பாய் மதுசிங்க (வினோத்) ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (கு)






# 2020ல் ஆட்டிப் படைக்கப்போகும் சனி, ராகு, கேது பெயர்ச்சி!

## எந்தெந்த ராசிக்கு ராஜயோகம்?

2020ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் சனிப்பெயர்ச்சி நிகழப்போகிறது. தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு சனி நகர்கிறார். அதே போல ராகு கேது பெயர்ச்சியும் நடைபெறுகிறது. தனுசு ராசியில் இருந்து குரு பகவான் மகரம் ராசியைச் சென்றடைகிறார்.
இந்தக் கிரகங்களின் இடப்பெயர்ச்சியால் தனுசு முதல் மீனம் வரை உள்ள ராசிக்காரர்களுக்கு 2020ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.
இது பொதுவான பலன்கள்தான் ஒருவரின் ஜாதகத்தில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் தசாபுத்தியின்படியே நன்மை தீமைகள் நடைபெறும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
2020 ஆம் ஆண்டில் ஒன்பது கிரகங்களின்பெயர்ச்சிகளும்நடைபெற உள்ளன. முக்கியமாக சனி, ராகு கேது, குரு ஆகிய கிரகங்களின் நகர்வை வைத்து பலன்கள் கணிக்கப்படுகின்றன.



### கும்பம்




2020ஆம் ஆண்டு கும்பம் ராசிக்காரர்களுக்கு மிகவும் நல்ல ஆண்டு. உங்கள் ராசி நாதன் சனி லாப ஸ்தானத்தில் இருந்து விரய ஸ்தானத்துக்கு வருகிறார். சனி உங்களுக்கு நண்பர். அவர் நல்லதுதான் செய்வார். அவர் விரய சனியாக வந்து மகரம் ராசியில் அமர்கிறார். சனி பகவான் ஏழரைச் சனியாக அமர்ந்தாலும் நல்லது செய்வார். உங்களுக்கு 2020ஆம் ஆண்டு ஆரம்பமே அமர்க்களம்தான். தொட்டது எல்லாம் வெற்றிதான் காரணம் லாப ஸ்தானத்தில் சனி, குரு, கேது சஞ்சரிக்கின்றனர்.
பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏழரைச் சனி காலமாக இருந்தாலும் குருவை நம்பி பாரத்தை இறக்கி வைத்து விடலாம். நேர்மையும் நம்பிக்கையும் முக்கியம். குருவின் பார்வையால் திருமண யோகம், புத்திரபாக்கிய யோகம் வரப்போகிறது. புது வீடு கட்ட ஆரம்பிக்கலாம். இடம் வாங்குவீர்கள். சனிபகவான் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீடான மீனத்தைப் பார்ப்பது சிறப்பு. ஏப்ரல் முதல் ஜூன் வரை உங்களுக்கு மிகவும் நன்றாக இருக்கும்.
ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான மாதங்களில்வேலைப்பளு அதிகமாக இருக்கும். வெளிநாடுகளுக்கு வேலை விடயமாக செல்வீர்கள். படிக்கும் மாணவர்கள் வேலைக்காக வெளியூர் வெளிநாடு போவீர்கள். திருமணங்கள் நடக்கும். பணம் தாராளமாக வரும். அபரிமிதமாக இருக்கும் செலவைப் பற்றிக் கவலைப்படவே மாட்டீர்கள். உடல் ஆரோக்கியத்தில அவ்வப்போது அக்கறை காட்டுங்கள்.
ராகு கேது பெயர்ச்சியும் நன்றாக இருக்கும். கேது பத்தாம் வீட்டுக்கும் ராகு நான்காம் வீட்டுக்கும் வருவது சிறப்பு. உங்கள் தொழில் நன்றாக இருக்கும் நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படும்.
ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரையிலான கால கட்டத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
ஊதாரித்தனமாகச் செலவு செய்யக்கூடாது. ஆலய தரிசனம் மனதை அலைபாய விடாது. 2020ஆம் ஆண்டு அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது.

### மீனம்

2020ஆம் ஆண்டு மீனம் ராசிக்காரர்களுக்கு அற்புதமான அதிசயங்கள் நிறைந்த ஆண்டாக அமையப்போகிறது. உங்கள் ராசி நாதன் குருவும் சனியும் பத்தாம் வீடான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றனர்.




ஜனவரி முதல் மார்ச் வரையான கால கட்டம் தொழிலில் அற்புதமாக இருக்கும். தொழில் செய்பவர்களுக்கு நிதி நெருக்கடிகள் தீரும். ஜனவரி இறுதியில் சனி பெயர்ச்சியாக லாப ஸ்தானத்துக்கு வருவது சிறப்பு. சொத்துக்கள் வாங்குவீர்கள். வீடு வாங்க முயற்சி செய்வீர்கள். வேலையில் கவனமாக இருக்கவும்.
ஏப்ரல் முதல் ஜூன் வரை பண விடயத்தில் முன்னேற்றம் ஏற்படும். திருமணம் நடக்கும் காரணம் சுக்கிரன் மூன்றாம் வீட்டில் இருப்பது சிறப்பு. குரு அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது பண வருவாயை அதிகப்படுத்தும்.
தொழில், வேலையில் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். மன உறுதியோடு இருங்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் அவசியம் வேண்டும்.
ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான கால கட்டத்தில் நல்லவை நிறைய நடக்கும். வங்கி கடன் கிடைக்கும். தொழில் விடயங்களில் பணவரவு நன்றாக இருக்கும். குடும்பம் அமைதியாகவும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கும்.
உடல் ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும் மன ஆரோக்கியமும் நன்றாக இருக்கும் நிம்மதியான உறக்கம் வரும்.
பத்தாம் வீட்டுக்கு குரு திரும்ப வரும் போது பண விவகாரங்களில் கொஞ்சம் தொய்வு ஏற்படும். ராகு கேது பெயர்ச்சி நன்றாக இருக்கும்.
ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான கால கட்டத்தில் தொழில் வியாபாரம் வளர்ச்சியடையும். கேது ஒன்பதாம் வீட்டிலும் ராகு மூன்றாம் வீட்டிலும் இருப்பது சிறப்பு. இதே கால கட்டத்தில் குருவும் பெயர்ச்சியாகி லாப ஸ்தானத்துக்கு வந்து விடுவார். உங்களுக்கு நிறைய நன்மைகள் நடக்க காத்திருக்கிறது. மீன ராசிக்காரர்கள் 2020ஆம் ஆண்டை மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்கத் தயாராகுங்கள்.




## வெற்றிக்கு இது தேவை!

வாழ்வின் வெற்றிக்குத்தடையாக தேவையற்ற சில கூச்சங்கள் உங்களின் சுபாவமா? கொஞ்சம் கவனியுங்கள். மனத்தின் அடித்தளத்தில் ஓர் அழுக்கைப் போலத்தான் கூச்ச சுபாவங்களும் படிந்து விடுகின்றன.
நீங்கள் எந்தக் காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று நினைத்தாலும் அல்லது இருக்கிற நிலையில் கொஞ்சம் முன்னேற வேண்டும் என்று நினைத்தாலும் முதலில் அதற்குத் தடையாகத்தான் இந்தக் கூச்சம் செயற்படும். இந்தக் குணம் எங்கிருந்து வருகிறது? பயம் என்ற ஒரு புள்ளியின் பிள்ளையாய்ப் பிறந்து கூச்சம், கோழைத்தனம், அறியாமை என்ற பல பிரிவுகளாய்ப் பிரிகின்றது.
சில சமயங்களில் விஷயமுள்ள, திறமை வாய்ந்த கோழைகளை விட வீரமான முட்டாள்கள் வென்றுவிடுவார்கள் என்பதை அறிந்திருப்பீர்கள். இதுதான் நிஜம்.
யாருக்கும் சுலபமாக இருக்கும் ஒரு குறைதான் இந்தச் சபை நடுக்கம். இதை வெல்ல என்ன வழி?
மனம் தனக்குள் தானே பல சூழ்நிலைகள், சம்பவங்கள் வழியாக சில விடயங்களை நம்மை அறியாமலேயே பதிவு செய்து வைத்துக் கொள்ளும். அதன்படி நான்குபேர் மத்தியில் உன்னால் எதையும் எதிர்த்துப் பேச முடியாது. அப்படிப் பேசினால் எடுபடாது. ஏன்? பேச நினைத்தானே உன்னைக் கேலி செய்வார்கள். மொத்தத்தில் இது உன்னால் முடியாது. இது போன்றவற்றை மனம் தனக்குள் சுருள் போலச் சுற்றி அடித்தளத்தில் வைத்துக் கொள்ளும். தகுந்த நேரம் வரும்போது மூளைக்குவிரித்துக்காட்டும். அதனால் நம்மையறியாமலேயே திடீரென்று உடல் படபடப்பு, நாக்குப் பிறழ்வது, பயம் இவையெல்லாம் தோன்றி ஒருகையாலாகித்தனத்தைக் கொடுக்கும்.
மனம் தனக்குள் எண்ணிலடங்காச் சக்தி கொண்ட பெரும் வரமே! இதைச் சரியான முறையில் உபயோகிப்பவன் யோகியாகிறான். தினமும் மனத்தோடு பேசுங்கள். இன்றிலிருந்து இந்த அச்சம் என்னைவிட்டு விலகி விட்டது. இனியெப்போதும் எதையும் என்னால் தைரியமாகச் செய்ய முடியும் என்று சொல்லுங்கள். சொல்லிக் கொண்டேயிருங்கள். விரைவிலேயே மனத்தின் அடித்தளத்தில் காலியிடங்கள் தோன்றும். உங்களின் புதிய முயற்சிகள் பதியும். பிறகு என்ன? எப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் சந்திக்கின்ற சக்தி வெளிப்படும். சபை நடுங்குமே தவிர சபை நடுக்கம் வராது.
எனவே உங்களின் நல்ல எண்ணங்கள், முயற்சிகளை வெளிப்படுத்த உங்களுக்குள்ளேயே இருக்கும் எதிரியைத் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு என்ன? எந்தச் சூழ்நிலையும் உங்களுக்கான வாய்ப்புத்தான்.



# கன்னியா வழக்கு: மன்று ஒத்திவைப்பு

திருகோணமலை, ஜன. 9

கன்னியா வெந்நீர் ஊற்றுத் தொடர்பான வழக்கு பெப்ரவரி 25ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் அத்துமீறி நுழைந்து சில அடாவடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திருகோணமலை, மாணிக்கவாசகர் வீதி, இலக்கம் 66இல் வசித்துவரும்கோகிலரமணிதிருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களாக தொல் பொருள் திணைக்களப் பணிப்பாளர், கொழும்பு மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்குத் தீர்ப்பு வரும் வரையில், மனுதாரரையோ அல்லது மற்றைய பக்தர்களையோ கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் கோயிலுக்கு அல்லது அதனை அண்மித்த பகுதிக்கோ செல்வதை தடுக்கக் கூடாது எனவும் அந்தப் பகுதியில் அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவதை தடை செய்யுமாறும் எதிர்மனுதாரர்கள் மாரியம்மன் கோயிலுக்கு உரித்தான ஆதனங்களை நிர்வகிப்பதை தடுக்கக் கூடாது எனவும் திருகோணமலை மேல் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. அடுத்த தவணையில், அனுமதிச் சீட்டுக்களை விநியோகிக்க மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திருகோணமலை வெல்கம் விகாரையின் விகாராதிபதி குறித்த வழக்கில் தன்னையும் இடையுகு மனுதாரராக இணைத்துக்கொள்ளுமாறு தனது சட்டத்தரணிகளூடாக மன்றில் விண்ணப்பம் செய்தார். குறித்த விண்ணப்பத்துக்கு மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்ததுடன் குறித்த வழக்கில் வெல்கம் விகாரையின் விகாராதிபதி ஒரு அவசியமான தரப்பே அல்ல என்றும் தனது வாதத்தை முன்வைத்தார். இதனையடுத்து இரு தரப்பினரையும் எழுத்துமூலமான சமர்ப்பணங்களை வழங்குமாறு தெரிவித்து, பெப்ரவரி 25ஆம் திகதி வரை வழக்கை மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது. (ம-ஒ.5)

## அதிகாரப்...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் மூலமாக தீர்வு காணப்பட வேண்டும் என்ற முயற்சிகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியவில்லை. எனவே, இந்தப் புதிய அரசுக்கு உறுதியான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இலங்கையின் கேந்திரமும் தன்மைகளும் நாட்டின் அபிவிருத்திக்கு பெரிய பங்களிப்புச் செய்யும். இந்த விடயங்களுக்கும் தொழிநுட்ப அபிவிருத்திக்கும் ஜனாதிபதி அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார். இதில் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி அதிகரிக்கப்படுவதன் மூலமாக அதற்கான இலக்கை வெகுவாக அடைய முடியும் என நினைக்கின்றோம்.

எமது நாடு பெரிய கடன் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் ஜனாதிபதி கவனத்தில்கொள்ள வேண்டும். 25 ஆண்டுகள் போர் ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அரசியல் தலைமைகள் இதனை விரும்பாத போதிலும் போர் இடம்பெற்றது. போர் இல்லாது போயிருந்தால்கடன்நெருக்கடிவந்திருக்காது. இப்போதுள்ள கடன்களில் சில நியாயமான கடன்களும் உள்ளன. எனினும், உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை நாம் அடைக்க எமது அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் தேசிய வேலைத்திட்டம் அவசியமாகும். சர்வதேச சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பும் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும். எனினும், கடந்த காலங்களில் இருந்து ஒவ்வொரு அரசும், ஒன்றையொன்று குற்றம் கூறிக் கொண்டு நடைமுறைகளைக் கைவிட்டன. அதேபோல் சர்வதேச நிலைப்பாட்டையும்கருத்தில்கொள்ளவில்லை.

இந்த நாட்டில் பல்லின சமூகங்கள் வாழ்கின்றன. இந்த நாட்டில் பௌத்த சிங்கள மக்கள் பெரும்பான்மை மக்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும், ஏனைய சமூகங்களும் வாழ்கின்றன. அவர்களைப் புறக்கணிக்க முடியாது.

ஏனைய மக்களின் கலாசாரம், சமூக கட்டமைப்பை மதிக்க வேண்டும். நீண்டகாலமாக இந்தக் கட்டமைப்பு உள்ளது. எமக்கு எவருடனும் முரண்பட வேண்டும் என்ற நோக்கம் இல்லை. அனைத்து மக்களுடனும் ஒன்றுபட்ட நாட்டுக்குள் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே உள்ளது.

அந்த விடயத்தில் நாட்டின் அரசியல் அமைப்பு மிகவும் முக்கியமான சட்டமாக கருதப்படுகின்றது. அரசியல் அமைப்பு நகர்வுகளில் ஏனைய நாடுகளை எடுத்துக்கொண்டால் அந்த நாடுகளில் சகல மக்களின் கருத்துக்கள், கொள்கைகள், உரிமைகள் என அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் அனைவரும் ஓர் இனம் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அடையாளம் இருக்க வேண்டும். ஜனாதிபதியும் புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க விரும்புவதாகக் கூறியுள்ளார். எனவே, அதுவும் இந்த முறையில் அமைய வேண்டும்.

1956ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் கோரிக்கை நிலைப்பாடு ஒன்றாகவே இருந்து வருகின்றது. 1983, 1987ஆம் ஆண்டுகளில் பாரிய நெருக்கடி ஏற்பட்ட பின்னர் 1988ஆம் ஆண்டு 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதில் தமிழ் மக்கள் ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய திருத்தம் வந்தது. எனினும், ஐக்கிய இலங்கைக்குள் இணைந்து வாழக்கூடிய சூழல் ஏற்படவில்லை.

அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் மூலமாக தீர்வு காணப்பட வேண்டும் என்ற முயற்சிகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. பல கரிசனைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், முழுமையான தீர்வு ஒன்றுக்கு வர முடியவில்லை.

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத்தீர்வுகாணப்படமுடியவில்லை. எனவே, இந்தப் புதிய அரசு உறுதியான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் பல நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தீர்வு விடயத்தில் சர்வகட்சி மாநாட்டில் தீர்வு குறித்து ஆராயப்பட்டது. அவற்றை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்று மஹிந்த ராஜபக்சவின் சகோதரரின் தலைமையில் அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில் மஹிந்த ராஜபக்சவும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளார். எனவே, தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

அதேபோன்று இந்த விடயத்தில் சர்வதேசத்தின் முக்கியத்துவம் அவசியமானது. குறிப்பாக இந்தியா மற்றும் சர்வதேசம் இந்த நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவர அதிக ஆர்வம் காட்டின. அப்போதும் மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச இருவரின் பங்களிப்பும் இருந்தது. எனவே, இப்போதும் சர்வதேச கோரிக்கைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

அத்துடன், அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும். அபிவிருத்தியின் தன்மையில் தமிழ், முஸ்லிம் மக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச முதலீடுகள் அபிவிருத்திகள் என அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கூறுவது என்னவென்றால், நீங்கள் அரசியல்வாதி அல்ல. ஆகவே, நீங்கள் உண்மையைப் பேசுகின்றீர்கள். நீங்கள் சரியானதைச் செய்வீர்கள் என நம்புகின்றோம். ஐக்கிய இலங்கைக்குள் நாட்டின் அபிவிருத்திக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக உள்ளோம். இது ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை செய்வதன் மூலமே சாத்தியமாகும். அது நடந்தால் நாமும் ஆதரவு வழங்கத் தயாரக உள்ளோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவே இன்றும் தமிழ் மக்களின் வாக்குகளை உங்களால் வெற்றி கொள்ள முடியாது உள்ளது. அதற்கு நீங்கள் அவர்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியாமையே காரணமாகும். அவர்களின் நம்பிக்கையை, வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அவர்களின் உணர்வுகளை, மொழியை கலாசாரத்தை, உரிமைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போது அவர்களின் முழுமையான ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கும்- என்றார். (ம-22)

## கொக்குவிலில்...

மாலை மீட்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த, உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவியான மகேஸ்வரன் கஜேந்தினி(வயது- 20) இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த மாணவி தந்தையை இழந்தவர். வவுனியாவில் உறவினர் ஒருவருடைய மரண நிகழ்வுக்காக தாயாரும் சகோதரர்களும் நேற்றுமுன்தினம் சென்றிருந்தனர். இதனால் மாணவி பேர்த்தியாரின் பாதுகாப்பில் இருந்துள்ளார். நேற்று மதியம் ஒரு மணியளவில் தொலைபேசியில் அழுதபடி உரையாடிக்கொண்டிருந்துள்ளார். அப்போது பேர்த்தியார் அருகில் உள்ள தன்னுடைய வீட்டுக்குச் சென்று திரும்பி வந்தபோது வீட்டில் குறித்த மாணவியைக் காணவில்லை. இதனால் அயல் வீடுகளில் அவர் வந்தாரா எனப் பேர்த்தியார் விசாரித்துவிட்டு வந்து, மலசலகூடத்தை பார்த்துள்ளார். அங்கு தூக்கில் தொங்கிய நிலையில் மாணவி சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. (அ)













போர்ப் பதற்றச் சூழலில்

# ஈரானிலிருந்து புறப்பட்ட விமானம் நேற்று விபத்து

## 170 பேர் பரிதாபச் சாவு



தெஹ்ரான், ஜன. 9
ஈரான் அமெரிக்கா இடையே போர்ப் பதற்றம் நிலவி வரும் நிலையில், 170 பேருடன் சென்ற உக்ரைன் நாட்டு விமானம் ஈரானின் தலைநகர் தெஹ்ரான் விமான நிலையம் அருகே கீழே விழுந்து நொறுங்கியதாக ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானிலிருந்து உக்ரைன் தலைநகருக்கு நேற்று அதிகாலை புறப்பட்ட போயிங் 737 ரகத்தை சேர்ந்த அந்த விமானம் சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து நொறுங்கியது. தொழில்நுட்பக் காரணங்களால் விமானம் விபத்தில் சிக்கியதா அல்லது தாக்கப்பட்டதா? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

கீழே விழுந்து நொறுங்கியதில் விமானம் தீப்பிடித்து எரிந்தது. தீ கட்டுக்கடங்காமல் எரிந்ததால் மீட்புப்பணிகளில் சற்றுத் தாமதம் ஏற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் என மொத்தம் 170 பேரும் உயிரிழந்துவிட்டனர் என ஈரான் அரசு தொலைக்காட்சியில் செய்தி வெளியாகி உள்ளது. (ஒ.5)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

பக்தாத், ஜன. 9
ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட தகவல் பரவியதும் வளைகுடாப் பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. உலகில் கணிசமான அளவுக்கு மசகு எண்ணெய் உற்பத்தி வளைகுடா நாடுகளில் தான் மேற்கொள்ளப்படுகின்றது. ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து மசகு எண்ணெய் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் கடும் இடையூறு உருவாகி இருக்கிறது.

இதன் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் உயரத் தொடங்கி உள்ளது. ஒரு பரல் மசகு எண்ணெய் விலை 70 டொலரைத் தாண்டி உள்ளது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை சராசரியாக 5 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது. (ஒ.5)

# அமெ. படைகள் பயங்கரவாதிகள்

## ஈரான் அறிவிப்பு



தெஹ்ரான், ஜன. 9
ஈரான் இராணுவத் தளபதி கொல்லப்பட்டமையை அடுத்து, அனைத்து அமெரிக்கப் படைகள் மற்றும் இராணுவ ஊழியர்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாக அறிவிக்கும் சட்டம் ஈரான் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.


அந்தச் சட்டத்தில், அனைத்து அமெரிக்க படைகள், அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் மற்றும் அதோடு தொடர்புடைய நிறுவனங்கள், சுலைமானியை கொல்ல உத்தரவிட்ட அதிகாரிகள் என்று அனைவரும் பயங்கரவாதிகளாவர்.

அமெரிக்காவின் இராணுவம், உளவுத்துறை, நிதி, தொழில்நுட்பம், சேவை அல்லது தளவாடங்கள் உள்ளிட்ட பிரிவுகளுக்குச் செய்யப்படும் எந்த வொரு உதவியும் பயங்கரவாதச் செயலுக்கான ஒத்துழைப்பாக கருதப்படும், என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தச் சட்டமானது, அமெரிக்காவை பயங்கரவாதத்துக்கு ஆதரவான அரசாகவும், பிராந்தியத்தில் உள்ள அதன் படைகளை பயங்கரவாத குழுக்களாகவும் அறிவித்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் திருத்தப்பட்ட பதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# 290 நினைவிருக்கா?

## 52 பற்றிக் கூறிய ட்ரம்பிடம் கேள்வி



தெஹ்ரான், ஜன. 9
52 என்ற எண்ணைக் குறிப்பிடுபவர்களுக்கு 290 என்ற எண்ணும் நினைவிருக்க வேண்டும். ஒருபோதும் ஈரானுக்கு மிரட்டல் விடுக்க வேண்டாம்' என்று ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈராக் தலைநகர் பாக்தாத் விமான நிலையம் அருகே, அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில், ஈரானின் இரண்டாவது சக்தி வாய்ந்த நபராக கருதப்பட்ட இராணுவத் தளபதி குவாசிம் சுலைமானி கொல்லப்பட்டார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவின் இந்தத் தாக்குதலுக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்தது. சுலைமானி கொல்லப்பட்டதற்கு அமெரிக்காவைப் பழிவாங்குவோம் என்று ஈரான் நாட்டின் புதிய ராணுவத் தளபதி கூறினார். இதையடுத்து, ஈரானில் உள்ள 52 முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார். ஒருபோதும் ஈரானுக்கு மிரட்டல்கள் விடுக்க வேண்டாம் என்று அந்நாட்டு அதிபர் ஹசன் ரவுகானி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை எச்சரித்துள்ளார்.

**52 290?**

1979ஆம் ஆண்டு ஈரான் தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்த அதிகாரிகள் (அமெரிக்கக் குடிமக்கள்) 52 பேர் ஈரானியர்களால் ஓராண்டுக்கும் மேலாக பிணைக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டனர். அதைக் குறிப்பிட்டே 52 இடங்களில் தாக்குதல் நடத்துவோம் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார் எனக் கூறப்பட்டது. அதேபோல் 1988ஆம் ஆண்டு ஜூலை மாதம் வளைகுடாப் பகுதியில் சென்று கொண்டிருந்த ஈரானிய விமானம் அமெரிக்க போர்க்கப்பலால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 66 குழந்தைகள் உள்பட 290 பேர் கொல்லப்பட்டனர். இதை குறித்தே தற்போது 290 என்ற எண்ணை அமெரிக்கா நினைவில் கொள்ள வேண்டும் என்று ஹசன் ரவுகானி கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## ஈரான் வெளிவிவகார அமைச்சருக்கு அமெரிக்கா கதவடைப்பு

அமெரிக்காவில் இன்று நடைபெற இருக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் முகமது ஜாவத் ஷாரீப் பங்கேற்க இருந்தார். இது அமெரிக்க இராணுவ நடவடிக்கை குறித்து ஈரான் தரப்பு வாதத்தை சர்வதேச சமூகத்திடம் முன்வைப்பதற்கான முதல் மற்றும் முக்கியமான வாய்ப்பாகப் பார்க்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தீவிரம் காட்டிய ஜாவத் ஷாரீப் விசா வழங்குமாறு அமெரிக்காவுக்கு கோரிக்கை விடுத்தார். ஆனால் அவரது கோரிக்கையை நிராகரித்த அமெரிக்க அரசு அவர் அமெரிக்காவுக்குள் நுழையத் தடைவிதித்தது.

ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் ஐ.நா. பொதுச் செயலர் அன்டனியோ குட்டரெஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஜாவத் ஷாரீப்பை நாட்டுக்குள் நுழைய அமெரிக்கா அனுமதிக்காது என்று கூறினார். (ஒ.5)

# அமெ. தாக்கினால் உடனே பதிலடி

## ஈரான் கர்ச்சிப்பு

தெஹ்ரான், ஜன. 9
அமெரிக்கா இனித் தாக்குதல் நடத்தினால் ஈரான் உடனுக்குடன் பதிலடி கொடுக்கும். இதற்காக ஈரானின் அனைத்துப் பிரிவு படைகளும் தயார் நிலையில் வைக்கப்படும். இவ்வாறு ஈரானிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவப் படைகள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக கடந்த சனிக்கிழமை முதல் ஈரான் கூறி வந்தது. ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் உஷார் படுத்தப்பட்டு இருந்தன. அதையும் மீறி ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதலை நேற்று நடத்தி விட்டது.

இதையடுத்து ஈரானுக்கு பதிலடி கொடுக்க அமெரிக்கா தயாராகி வருகிறது. அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ஜெனாதன் தெரிவித்ததாவது: வளைகுடாவில் நிலைமையை ஆய்வு செய்து வருகிறோம். விரைவில் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனால் அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தும் என்று தெரிகிறது. ஈரானில் 52 இடங்களைக் குறி வைத்திருப்பதாக ஏற்கனவே அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்க விமானப்படை 52 சிறிய போர் விமானங்களை வைத்து ஒத்திகை பார்த்துள்ளது. (ஒ.5)

# ஈராக்கிலுள்ள அமெ. படைகள் மீது ஈரான் அதிரடித் தாக்குதல்

## 80 படையினர் சாவு









தெக்ரான், ஜன. 9
அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத் தளம் மீது ஈரான் 12க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி நேற்று அதிகாலை அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது.
அமெரிக்க இராணுவ தளங்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் திடீர் தாக்குதலில் அமெரிக்கப் படையினர் 80 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகம் என்று கூறப்படு கின்றது. அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் ராணுவ தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டார். ஈரானில் உள்ள 52 முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்கா சவால் விடுத்தது. அமெரிக்காவின் செயல்களுக்குப் பழி தீர்ப்போம் என்று ஈரானும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தது.
இந்த நிலையில், ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத் தளம் மீது ஈரான் 12க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் உறுதிப்படுத்தியுள்ளது.
'ஈராக்கின் அல்ஆசாத் மற்றும் இர்பில் பகுதிகளில் உள்ள அமெரிக்க விமானப் படைகள் முகாம் மற்றும் அதன் கூட்டணிப் படைகள் மீது ஈரான் 12க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.
அந்த ராணுவத் தளங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது' என்று பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஈராக்கிலுள்ள கனேடிய படையினர் இடமாற்றம்

ஒட்டாவா, ஜன. 9



ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் மீது ஈரான் அதிரடியாக நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஈராக்கிலுள்ள கனேடிய இராணுவத்தினர் குவைத்துக்கு இடமாற்றப் பட்டுள்ளனர்.
ஈராக்கில் முகாமிட்டுள்ள கனடா நாட்டு இராணுவ வீரர்களில் 500 பேரை தற்காலிகமாக குவைத் நாட்டிற்கு மாற்றுவதாக கனடா ராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
'நேட்டோவின் திட்டப்படி எங்களது இராணுவ வீரர்கள் சிலர், தற்காலிகமாக குவைத் நாட்டிற்கு மாற்றப்பட உள்ளனர். இராணுவ வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது எங்கள் கடமை' என்று கனடா ராணுவ தலைமை அதிகாரி ஜனத்தன் வன்ஸ் தெரிவித்துள்ளார்.
ஈரானின் அச்சுறுத்தல் காரணமாக பிரான்ஸ் நாடும் ஈராக்கில் உள்ள தங்களது படைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ.5)

## ஈரானில் நிலநடுக்கம்


தெஹ்ரோன், ஜன. 9
ஈரானில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 4.9 ஆக நிலநடுக்கம் பதிவாகியது.
இதுகுறித்து அமெரிக்கப் புவியியல் மையப் பரப்பில், 'ஈரானில் புஷெர் அணுமின் உலை அருகே இன்று (நேற்றுப் புதன்கிழமை) மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.9ஆகப் பதிவாகியது. இந்த நிலநடுக்கத்தின் ஆழம் 10 கிலோ மீற்றர்' என்று தெரிவித்துள்ளது.
மிதமான நிலநடுக்கம் என்பதால் லேசான அதிர்வுகள் மட்டும் ஏற்பட்டதாகவும், இந்த நிலநடுக்கத்தினால் பாதிப்பு எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக, 2017ஆம் ஆண்டு ஈராக் ஈரான் எல்லையில் ரிக்டர் அளவில் 7.3 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கத்தில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (ம)





## நெஞ்சை உருக்கும் நிகழ்வு

ஆஸ்திரேலிய காட்டுத் தீயால் 30 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். 50 லட்சம் விலங்குகள் வரையில் சாவடைந்துள்ளன. காட்டுத் தீயை அணைக்கச் சென்ற தீயணைப்பு வீரர் ஒருவரும் உயிரிழந்தார். அவரின் இறுதிக் கிரியைகள் இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதில், தீயணைப்பு வீரரின் தொப்பியையும் பதக்கத்தையும் அவரது சின்னஞ்சிறு குழந்தை அணிந்து அணிவகுத்துச் சென்றது. (ஒ.5)





# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.9
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

- - - -

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)



# கிக் பொக்சிங்கில் பங்கேற்கும் மாணவர்கள் மதிப்பளிப்பு

வவுனியா,ஜன.9
பாகிஸ்தான் லாகூரின் கடாபி விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள 'கிக் பொக்சிங்' குத்துச்சண்டை போட்டியில் கலந்துகொள்ளவுள்ள பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி மாணவர்களான வடமாகாண ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தை சேர்ந்த எஸ்.சஞ்சயன், ரி.நாகராஜா மற்றும் கெ.ராகுல் ஆகியோர் கல்லூரி சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்று புதன்கிழமை கல்லூரி அதிபர் பொ.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண 'கிக் பொக்சிங்' பயிற்றுவிப்பாளர் எஸ். நந்தகுமார், கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியை திருமதி சாந்தினி மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (110)

# சைக்கிள் ஓட்டப் போட்டி

கொடிகாமம், ஜன.9
கிளிநொச்சி சிவபாத கலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகளுக்கான இல்லங்களுக்கிடையிலான சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்று புதன்கிழமை பாடசாலை விளையாட்டுச் செயலர் திருமதி உதயலட்சுமி தேவானந்தன் தலைமையில் இடம் பெற்றது.

சைக்கிள் ஓட்டப்போட்டி கிளிநொச்சி பரந்தன் சந்தியில் இருந்து ஆரம்பமாகி அறிவியல் நகர் பாடசாலை மைதானத்தை சென்றடைந்தது. ச.லக்சன் முதலாமிடத்தையும், மா.தமிழன்பன் இரண்டாம் இடத்தையும், நா.கிருசாந் மூன்றாம் இடத்தையும், பெற்றுக் கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக தடைப்பட்டருந்த போட்டி 20 வருடங்களின் பின்னர் நேற்று இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (159)



# கால்பந்தாட்ட போட்டி நாளை

யாழ்ப்பாணம்.ஜன.9
நெடுந்தீவு கால்பந்தாட்ட அணிக்கும், ஊர்காவற்றுறை, வேலணை தெரிவு கால்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கால்பந்தாட்ட போட்டி நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (23)



# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.9
தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை சென்.ஹூட்ஸ் விளையாட்டுக்கழக அணி,பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூ மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கூவில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் பிறை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

- - - - -

யாழ்ப்பாணம்,ஜன.9
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகஅணி,வதிரிடைமண்ஸ் விளையாட்டுக் கழக அணிகள்வெற்றிபெற்றன.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல்3 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் அறிவொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4 மணிக்கு இடம் பெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் இளவாலைசென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் வதிரி டைமன்ஸ்விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# ஞானபாஸ்கரோதய மெகாநைட் பிறீமியர் லீக்

யாழ்ப்பாணம்,ஜன.9
ஞானபாஸ்கரோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவானது மே மாதம் இடம்பெறவுள்ளது. அதனை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக மின்னொளியிலான லீக் போட்டியாக "ஞானபாஸ்கரோதய மெகாநைட் பிறீமியர் லீக்" மென்பந்து சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

8அணிகள் பங்குபற்றும் 32போட்டிகள் கொண்டமைந்ததாக அணிக்கு 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக இந்தத் தொடர் இடம்பெறும். இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 120 வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்படும் இந்தத் தொடர் தொடர்ச்சியாக் 20 நாள்கள் மின்னொளியில் இடம்பெறும். இதில் பங்கு பற்றும் வீரர்கள் அனைவரும் 8 அணி உரிமையாளர்களாலும் ஏலமுறை மூலம் உள்வாங்கப்படவுள்ளனர்.

# சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.9
பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம் நடத்தம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 103ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 6மெணிக்கு இடம் பெறவுள்ளது. (23)

# மரதன் ஓட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜன.9

விதையனைத்தும் விருட்சமே குழுமமும், யாழ்.செயலமைப்பும் இணைந்து தைத்திரு நாளை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இளவாலை சந்தியிலிருந்து ஆரம்பித்து, விளான் சந்தியூடாக விளாவெளிச் சந்தியை சென்றடைந்து, பண்டத்தரிப்பு சந்தியூடாக மீண்டும் இளவாலையை இந்த மரதன் ஓட்டம் வந்தடையவுள்ளது.

இந்தப் போட்டியில் ஆண்கள் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும் என்பதுடன்திறந்த போட்டியாக இது இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ந)



2020 ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற

# முதல் இலங்கை வீராங்கனை

நடப்பு ஆண்டில் டோக்கியோவில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டித் தொடருக்கு இலங்கையிலிருந்து முதன்முதலாக தகுதி பெற்றார் குதிரைப் பந்தய வீராங்கனை மற்றில்டா கார்ல்சன்.அத்தோடு குதிரைப் பந்தயப் போட்டிப் பிரிவில் இலங்கை சார்பாக ஒலிம்பிக்கில் பங்கேற்கப்போகும் முதல் நபர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2020 ஒலிம்பிக் போட்டித் தொடர் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான அடைவு மட்டத்தை ஒலிம்பிக் சம்மேளனம் வெளியிடும்.

அதன்படி நேற்றுமுன்தினம் குதிரைப் பந்தய சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட தரவரிசைப் புள்ளிகளின் அடிப்படையில் மற்றில்டா கார்ல்சன் ஒலிம்பிக் தகுதியைப் பெற்று டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற முதல் இலங்கையரானார்.

ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்றுள்ள மற்றில்டா கார்ல்சன் இலங்கையில் பிறந்து பின்னர் சுவீடன் குடும்பத்தினருக்கு தத்துக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# றொனால்டோ புதிய சாதனை

யுவன்டஸ் அணிக்காக விளையாடி வரும் கிறிஸ்டியானோ றொனால்டோ ஹட்ரிக் கோலில் புதிய சாதனையொன்றை படைத்துள்ளார்.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோ உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக கருதப்படுகிறார். இவர், இத்தாலியில் உள்ள யுவன்டஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்றுமுன்தினம் செரி ஏயில் நடைபெற்ற போட்டியில் யுவென்டஸ் காக்லியாரி அணிகள் மோதின. இதில் யுவன்டஸ் அணி 4:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் கிறிஸ்டியானோ றொனால்டோ 49, 67 ஆவது நிமிடங்களில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தியும், ஆட்டத்தின் 82 ஆவது நிமிடங்களில் கோல் அடித்து ஹட்ரிக் கோலை பதிவு செய்தார். இந்த ஹட்ரிக் கோல் மூலம் கால்பந்தில் 10 வெவ்வேறான தொடர்களில் ஹெட்ரிக் கோல் அடித்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார்.



# என்னை பரிசோதனை செய்ய இந்தியத் தொடர் சிறப்பானது

லாபஸ்சாக்னே தெரிவிப்பு



ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரராக மாறியுள்ள லாபஸ்சாக்னே, இந்தியாவை இந்தியாவில் எதிர்கொள்வது கடினம் எனக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியில் இடம் பிடித்துள்ள லாபஸ்சாக்னே, அபார ஆட்டத்தால் தலைசிறந்த நட்சத்திர வீரராக உருவாகியுள்ளார். கடந்த 5 போட்டிகளில் நான்கில் சதம் அடித்து அசத்தினார். விரைவாக 1000 ரன்களை கடந்த வீரர்கள் பட்டியலில் டான் பிராட்மேன் சாதனையை முறியடித்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான சிட்னி போட்டியில் இரட்டை சதம் அடித்தார். டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியன் காரணமாக இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

இந்தியாவில் எப்போதெல்லாம் விளையாடுகிறமோ, அப்போதெல்லாம் அது கடினமான தொடராக இருக்கும். ஏனென்றால், அவர்கள் மிகவும் கடினமாக எதிரணி. அவர்கள் சிறந்த பேட்ஸ்மேன்கள் மற்றும் பந்து வீச்சாளர்களை கொண்டுள்ளனர். ஆகவே, இந்தத் தொடர் சவாலானதாக இருக்கும். ஆனால் ஒரு வீரர், அவரை பரிசோதனை செய்து கொள்ள கடினமான சூழ்நிலையில் சிறந்த எதிரணியை எதிர்த்து விளையாட விரும்புவார்கள் - என்றார்.

# மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.9

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் சைக்கிள் ஓட்டம், மரதனோட்டப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 6 மணிக்கு அராலி கரைப்பிட்டி பிள்ளையார் கோவில் முன்றிலில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(23)

# செல்போன் உதிரிப்பாகங்களில் விராட் கோக்லியின் உருவப்படம்



கிரிக்கெட் ரசிகர் ஒருவர், பழைய செல்போன்களின் உதிரி பாகங்களை பயன்படுத்தி இந்திய அணியின் கேப்டன் விராட் கோக்லியின் உருவப் படத்தை உருவாக்கியுள்ளார்.

கவுகாத்தியை சேர்ந்த ராகுல் பரேக் என்ற கிரிக்கெட் ரசிகர், பழைய செல்போன்களின் உதிரிப் பாகங்களை பயன்படுத்தி இந்திய அணியின் கேப்டன் விராட் கோலியின் உருவப்படத்தை உருவாக்கியுள்ளார்.

வெவ்வேறு வடிவிலான உதிரிப்பாகங்கள், வயர்களை கச்சிதமாக இணைத்து தத்ரூபமாக கோக்லியின் உருவத்தை கொண்டு வந்து ஆச்சரியப்படுத்திய அந்த ரசிகரை விராட் கோக்லி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்ததுடன் அந்த ஓவியத்தில் தனது ஆட்டோகிராப்பையும் பதிவிட்டார். பிறகு கோக்லிக்கு அந்த ஓவியத்தை பரிசாக ராகுல் பரேக் வழங்கினார்.



# மரிய ஷரபோவாவுக்கு வைல் கார்டு அனுமதி

ரஷ்ய வீராங்கனை மரிய ஷரபோவா நேரடியாக முதன்மை சுற்றில் பங்கேற்கும் வகையில், 'வைல் கார்டு' சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவா கடந்த ஆண்டு அமெரிக்க ஓபனில் கலந்து கொண்டார். அப்போது முதல் சுற்றில் செரீனா வில்லியம்சிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

அந்த சமயத்தில் ஷரபோவா தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டார். அதனால் சுமார் ஆறு மாதங்கள் எந்தவொரு தொடரிலும் பங்கேற்காமல் இருந்தார்.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய ஓபனில் விளையாட அவருக்கு வைல்டு கார்டு சிறப்பு அனுமதி வ்ழங்கப்பட்டுள்ளது. ஐந்து முறை கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற அவர், 2008 இல் ஆஸ்திரேலிய ஓபனை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

## மரண அறிவித்தல்



மலர்வு 12 . 12 . 1959

உதிர்வு 08 . 01 . 2020

### திருமதி பரமராஜா லோகேஸ்வரி (ராஜாத்தி)

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமராஜா லோகேஸ்வரி (ராஜாத்தி) நேற்று (08.01.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு புதல்வியும் பொன்னம்பலம் பரமராஜாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2020) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/10, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல் :பொ.பரமராஜா
(கணவர்)

077 715 8856

## 2019 ஆபிரிக்கா கால்பந்து வீரர் விருதை வென்றார்

# செனகல் வீரர் சேடியோ மானே

செனகல் நாட்டைச் சேர்ந்த சேடியோ மானே, முகமது சாலாவை பின் தள்ளி 2019ஆம் ஆண்டுக்கான ஆபிரிக்கா கால்பந்து வீரர் விருதை வென்றுள்ளார்.

எகிப்து நாட்டு கால்பந்து அணி வீரர் முகமது சாலா. செனகல் நாட்டு வீரர் சேடியோ மானே. இருவரும் இங்கிலீஷ் பிரிமீயர் லீக்கில் லிவர்பூல் அணிக்காக விளையாடி வருகிறார்கள். இவர்கள் இடம் பிடித்துள்ள லிவர்பூல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. 2018-2019ஆம் ஆண்டு யூரோ சம்பியன்ஸ் லீக்கை கைப்பற்றியது. அத்துடன் நான்கு கிண்ணங்களையும் வென்றது.



ஒவ்வொரு ஆண்டும் ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளில் உள்ள கால்பந்து வீரர்களில் சிறந்தவருக்கு இந்த வருடத்திற்கான ஆபிரிக்க வீரர் விருது வழங்கி கௌரிவிக்கப்படுகின்றது.

2017 மற்றும் 2018 இல் முகமது சாலா இந்த விருதை பெற்றார். இந்த முறையில் விருதை பெற்று ஹற்ரிக் சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சேடியோ மானே என்ற செனகல் வீரர் இந்த விருதை தட்டிச் சென்றார். விருது பெற்ற மானேவுக்கு முகமது சாலா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து சேடியோ மானே தெரிவிக்கையில்;

இது எனது திறமைக்கு கிடைத்த விருது. எனது வெற்றிப் பயணத்துக்காக தொடர்ந்து ஆதரவு வழங்கிய செனகல் நாட்டு ரசிகர்களுக்கு நன்றிகள். இந்த விருதைப் பெற்றதன் மூலம் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். என்னுடன் எனது கிராம மக்களும் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள் - என்றார்.

கணக்காளர் சேவை
(SLAcS)
விசேட வகுப்புக்கள்
வெள்ளி. (10/1). சனி (11/1)
9.00 - 3.00
FR-பாலா Sir
கடந்தகால வினாத்தாள்கள்
T.P 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு
யாழ்நகர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 02 . 1948

மறைவு 08 . 01 . 2020

### திருமதி கனகரத்தினம் தங்கரத்தினம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் தங்கரத்தினம் நேற்று (08.01.2020) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் - குட்டிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் ரகுநாதன். சிவகுமார். ஜெயக்குமார். நாகஜோதி. பத்மதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுலோசனா. ராதிகா. பிரசன்னா. பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபப்பிரியன். மதுஷாங்கி. சானியா. ஆதர்ஷி. நிவேதிகா. சதுர்ஷன். சாருகேஷ். பிருதிவ். காவ்யா. துவாரகா. யதுர்ஷனா. தரணிகன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் புஸ்பராணி. மகேஸ்வரி. திருநாவுக்கரசு. ராஜேஸ்வரி. ஞானசௌந்தரி. மங்கையர்க்கரசி. திருலோகசுந்தரம். ஞானலக்சுமி. திரிபுரசோதி. பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரி யும் பூமணி (ரத்தினம்மா) காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் செல்வரத்தினம். சிவகுருநாதன். தனபாலசிங்கம். காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2020) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல் :
குடும்பத்தினர்.

077727 9794

ஆண் வேலை ஆள்கள் தேவை
கோழிப் பண்ணையிலும் கோழி இறைச்சிக்கடையிலும் இரவு, பகல் தங்கி வேலை செய்வதற்கு ஆண் வேலையாள்கள் தேவை.
076 661 8318

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 யூலை பரீட்சைக்கான
aat [SriLanka]
[aat1, aat2, aat3]
Qualification:- G.C.E. O/L 6Passes
Medium - Tamil& English.
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.